SRI LANKA Youth

# பரதகீதாஞ்சலி



தேசிய இளைஞர் சேவைகள் மன்ற
இசை நடனக் கல்லூரி,
மருதனார்மடம்.

SRI LANKA
Youth

# பரதகீதாஞ்சலி



தேசிய இளைஞர் சேவைகள் மன்ற
இசை நடனக் கல்லூரி,
மருதனார்மடம்.











# ஆசியுரை

யாழ் என்னும் இசைக்கருவியின் பெயரில் தன் பெயரைப் பதித்த யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் டிப்ளோமா பாடநெறி யின் முதலாவது ஆண்டு விழாவை இசை நடனக் கல்லூரி மாணவர்கள் மருதனார்மடத்தில் கொண்டாடுவதில் பெருமையடைகின்றோம்.

இசையினாலும் நடனத்தினாலும் சாதிக்க முடியாதவற்றை சாதித்துக் கொள்ளலாம். பரதக்கலை அன்று தொட்டு இன்றுவரை தமிழர்களின் பாரம்பரிய கலையாக விளங்குகின்றது. இன்று மொழி மத வேறுபாடின்றி பரதக்கலையைக் கற்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதனால் பரதக் கலை ஒரு சாஸ்திரக் கலையாக மிளிருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று இசையால் மயங்காத உலகம் இல்லையென்று சொல்லப்படுகின்றது.

முதலாம் வருடத்தை பூர்த்தி செய்த எமது மாவட்ட இளம் தளிர்கள் எல்லோரும் இரண்டாம் வருடமும் பூர்த்தி செய்து சிறப்புத் தேர்ச்சி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்நாட்டின் பல பாகங்களிலும் தங்கள் இசையினையும் நடனத் தினையும் அரங்கேற்றிய மாணவர்கள். எல்லோரும் பாராட்டப்பட்டவர்கள். அத்தகைய வித்தகர்களாக அவர்கள் போதனாசிரியர்களால் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறியை யாழ் மாவட்டத்தில் நடாத்துவதற்கு அனுமதி அளித்த எங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர், பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா அவர்களுக்கு நாங்கள் முதற்கண் இம் மாவட்டத்தின் சார்பில் நன்றிகளையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பயிற்சியின் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்ட போது தங்களை அர்ப்பணித்து செயற்படுத்திய திருமதி.மகாலட்சுமி ஜெயநாதன், திருமதி.கமலராணி ஜெயபாலசிங்கம், நடராஜா குமரவேள், திருமதி.ஜெயந்தி

சுகிர்தன் ஆகியோருக்கும் இதனை உருவாக்குவதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் திரு.த.ஈஸ்வரராஜா அவர்களுக்கும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி. வினோதினி ஸ்ரீமேனன் அவர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இதற்கான பயிற்சியினை நடாத்துவதற்கு இடத்தினை எமக்குதவிய கல்லூரி அதிபர், ஆசிரியர்களிற்கும் எனது நன்றிகளும் வாழ்த்துக்களும் .

இங்கு பயிலும் இளைஞர்கள் யுவதிகள் யாவரும் இந்நாட்டின் சொத்துக்களாக மிளிரும் காலம் வெகுதூரத்தில் இல்லை ஆளுமை விருத்தி உள்ளவர்களாக உள்ளத்தினை ஆற்றுப்படுத்துபவர்களாக இவர்கள் எதிர்காலம் ஒளிமயமாக அமைய வாழ்த்துகிறேன்.

***ஸ்ரீமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்,***

***தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாண இணைப்பாளர்***





# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச்செய்தி


கடந்த வருடம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் மூலம் யாழ்ப்பாணம் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட நடனம் மற்றும் சங்கீத பாடநெறியின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்படும் கலைவிழாவிற்கான வாழ்த்துக்களை மிகவும் உளமார்ந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் முறையாக இவ்வாறான பாடநெறியினை ஆரம்பித்தது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன் அதனை அம்மாவட்டத்தின் இளைஞர் யுவதிகளுக்கு கிடைத்த பெரும் பாக்கிமாகக் கருதுகின்றேன்.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு தேர்வு செய்யப்படாத இளைஞர் யுவதிகளுக்கு நடனம் மற்றும் சங்கீதம் பயிலக்கூடியதாக இருப்பது இளைஞர் யுவதிகளுக்கு கிடைத்த மிகவும் பயனுள்ள வரப்பிரசாதமாக இருக்கின்றது.

இப்பாடநெறியானது இரண்டு வருட பயிற்சிப் பாடநெறியாக அமைவதுடன் திறமைகள் மிக்க இளைஞர் யுவதிகளுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பெல்வூட் கலைக் கல்லூரியில் நடனம் மற்றும் சங்கீத கல்வியை பயிலும் சந்தர்ப்பம் இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பாடநெறியை நடாத்துவதற்காக வாய்ப்பளித்த யாழ்ப்பாணம் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் களுக்கும் இப்பாடநெறியினை சிறப்பாக நடாத்தி வரும் இணைப்பாளர், விரிவுரை யாளர்கள் அனைவருக்கும் மற்றும் இப்பாட நெறியினை ஏற்பாடு செய்து கொடுத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சட்டத்தரணி லலித் பியும் பெரேரா
தலைவர் / பணிப்பாளர் நாயகம்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



இளைஞர்களுக்கிடையே மறைந்திருக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் கலை, கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக கடந்த ஆண்டு யா/ இராமநாதன் மகளிர் கல்லூரியில் இரண்டு ஆண்டு காலத்திற்கான இசை, நடன பயிற்சி நெறி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பயிற்சிநெறியில் பயின்று வரும் மாணவிகளால் அதன் முதலாவது ஆண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுவதனை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பயிற்சி நெறியினை யாழ் மாவட்டத்தில் நடாத்துவதற்கு எமக்கு அனுமதியளித்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா அவர்கட்கும் எமக்கு நல்வழி காட்டிய முன்னால் வட மாகாணப் பணிப்பாளர் திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப் பயிற்சி நெறி மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு எமக்கு ஒத்துழைப்பு நல்கும் பயிற்சி நெறியின் இணைப்பாளர் திருமதி மகாலட்சுமி ஜெயநாதன் அவர்கட்கும் மற்றும் விரிவுரையாளர்களான திரு. குமரவேள், திருமதி ஜெயந்தி சுகிர்தன், திருமதி. கமலராணி ஜெயபாலசிங்கம் ஆகியோர்களிற்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

மேலும் இப்பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெறும் மாணவர்கள் எதிர்காலத்தில் ஆசிரியர்களாக விரிவுரையாளர்களாகத் திகழ்ந்து சமூகத்திற்கு நற்பணியாற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி



**திரு. தம்பிராஜா ஈஸ்வரராஜா,**
**உதவிப் பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**




# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

தேசிய இளைஞர் சேவை மன்றமானது இளைஞர் யுவதிகளின் ஆற்றல்களை சமூகமட்டத்தில் இருந்து மேம்படுத்தி வெளிக்கொணர்ந்து செயற்பட்டு வருகின்றது. அந்தவகையில் யா/ இராமநாதன் மகளிர் கல்லூரியில் கடந்த ஓராண்டு காலமாக நடன சங்கீத பயிற்சிநெறி நடை பெற்று வருகின்றது.

இப்பயிற்சிநெறியில் பயின்று வரும் மாணவர்களினால் அதன் முதலாவது ஆண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடுவதை இட்டு இப்பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளர் என்றவகையில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இப்பயிற்சி நெறியினை முதன் முதலில் யாழ் மாவட்டத்திற்கு அறிமுகப் படுத்திய தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர், மாகாணப் பணிப்பாளர், மாவட்ட உதவி இயக்குனர் அவர்களுக்கும் நன்றி கூறுவதோடு மேலும் இப்பயிற்சி நெறியின் இணைப்பாளராக தனது கடமைகளை சிறப்பாக ஆற்றி வருகின்ற திருமதி மகாலக்ஷ்மி ஜெயநாதன் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களான திரு.குமரவேள், திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம், திருமதி ஜெயந்தி சுகிர்தன் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பயிற்சி நெறியானது மேலும் தொடர்ந்து செயற்பட எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.



**மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி,**
**மாவட்ட அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# யா/இராமநாதன் கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இசை நடனக் கல்லூரியின் 1ஆம் ஆண்டு நிறைவு தினத்தில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இலைமறை காயாக இருக்கும் மாணவர்களை வெளிக்கொணர்ந்து, அவர்களை ஊக்குவித்து தரமான ஆக்கங்களைப் பெற்று நூல் வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்து உள்ளங்களையும் மனதார வாழ்த்துகிறேன்.

**திருமதி. கமலராணி கிருஸ்ணபிள்ளை,**
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.

# யா/வேம்படி மகளிர் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர் வதற்கு ஓர் களமாக அமைந்திருக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இசை நடனக் கல்லூரியின் ஓராண்டு நிறைவு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை யிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் இராமநாதன் கல்லூரியில் இத்தகைய இசை நடனக் கல்லூரி இயங்குவதையிட்டு பெருமைப்படுவதுடன் இங்கு கல்வி கற்கும் மாணவர் அனைவரும் எதிர்காலத்தில் சிறந்த கலைஞர்களாக ஆசிரியர்களாக சிறந்த வள நபர்களாகத் திகழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஸ்ரீமதி. வேணுகா சண்முகரட்ணம்,
அதிபர்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
முன்னாள் அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி.





# விரிவுரையாளரின் வாழ்த்துச்செய்தி

கலைகள் அறுபத்து நான்கில் பரதமும், கர்நாடக சங்கீதமும் தன்னகத்தே கொண்டு இயங்கு கின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இசை நடனக் கல்லூரியின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு "பரதகீதாஞ்சலி" எனும் நூல் வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

விரிவுரையாளர் என்ற ரீதியிலும் எம் மாணவர்களின் இந்த முயற்சிக்கு பாராட்டு வாழ்த்து தெரிவிப்பதோடு, அவர்கள் மேன்மேலும் தங்கள் கல்வி, கலைகளில் முன்னேற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

திரு.ந.குமரவேள்
நடனத்துறை விரிவுரையாளர்,
தேசிய இ.சே.ம. இசை நடனக் கல்லூரி
ஆசிரியர்,
யா/தெல்லிப்பளை மகாஜன கல்லூரி





# விரிவுரையாளரின் வாழ்த்துச்செய்தி

"கலை இன்பமே நிலை இன்பம்" எனும் வாக்கியத்திற்கமைய எமது கல்லூரியின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு பரத கீதாஞ்சலி எனும் இந்நூல் வெளிவருவதையிட்டு பெருமிதம் அடைகிறேன். எமது கல்லூரியில் 98% பெண்களே கலை பயில்கிறார்கள். எனவே பெண்ணியத்தின் திறமையை வெளிப் படுத்துவதில் இப் "பரதகீதாஞ்சலி" ஓர் சான்றாகும்.

எமது கல்லூரி மாணவர்களின் திறமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேன்மேலும் தங்கள் திறமைகளை வெளிக் கொணர்ந்து வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டு மென எல்லாம் வல்ல நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமதி. ஜெயந்தி சுகிர்தன்,
நடனத்துறை விரிவுரையாளர்,
(தேசிய இளைஞர் சேவைகள் மன்ற
இசை நடனக் கல்லூரி)
ஆசிரியை,
யா/ஏழாலை மகா வித்தியாலயம்.





# மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

தேசிய இளைஞர்சேவைகள் மன்ற யாழ் மாவட்ட மருதனார்மடம் இசைநடனக் கல்லூரி அகவை ஒன்றினை பூர்த்தி செய்துள்ளமையிட்டு மன மகிழ் கின்றேன். எமது கௌரவ தலைவர் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா மற்றும் உதவிப் பணிப்பாளரின் வழி காட்டலுக்கமைய நுண்கலைகள் சிறக்கும் மருதனார்மடம் இராமநாதன் வளாகத்தில் ஆரம்பிக்கப் பட்ட இக்கல்லூரி தனக்கே உரிய தனிச் சிறப்புடன் இசை, நடனத்துறையில் சிறந்த மாணவர்களை உருவாக்கி வருவது மட்டுமின்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அவர்களின் கலைத்திறனையும் நிரூபித்து வருகின்றது.

இக்கலைப்பயணத்தின் முதலாம் அகவை மலர் வெளிவரும் இவ்வேளையில் தன்னிகரற்ற சேவையால் இவ் வெற்றிகளுக்குகாரணமான இசை, நடன விரிவுரை யாளர்களையும் எமது சகோதரர்களையும் வாழ்த்து வதுடன், அவர்கள் கலைச்சேவை சிறக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.


**திரு. செந்தில்க்குமரன்**
**தலைவர்,**
**மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம்.**
**யாழ்ப்பாணம்.**

# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...

எமது இசை நடனக் கல்லூரி மாணவர்களின் ஓராண்டு நிறைவு விழா மலரான **"பரதகீதாஞ்சலி"** உங்கள் கைகளில் கிடைத்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியடைந்த எமது கல்லூரியின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு பல சிக்கல்களுக்கு மத்தியிலும் பெரும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு இந்நூல் வெளியிடும் தருணத்தையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பரதகீதாஞ்சலி வெளிவருவதற்குத் துணை புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எம் கல்லூரி சார்பில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

**செல்வி. நவசக்தியா இராஜசேகரம்,**
**இதழாசிரியர்.**
**நடனத்துறை மாணவி,**
**1ஆம் வருடம்.**



# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இசை நடனக் கல்லூரியின் ஆண்டறிக்கை 2011 - 2012

அழகிற்கு மறுபெயர் கலை என்றால் அது இன்றியமையாதது. ஆய கலைகள் அறுபத்து நான்கில் இசையும், பரதமும் தன்னகத்தே கொண்டு மிளிர்வது எம் இசை நடனக் கல்லூரி. இதன் ஓராண்டு நிறைவெய்தியிருக்கும் இத் தருணத்தில் எமது கலைக்கூடத்தின் ஆண்டு அறிக்கையை எழுதும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி பேருவகை அடைகிறேன். எமது இசை நடனக் கல்லூரியின் தலைமைக் காரியாலயம் கொழும்பு, மகரகமவில் அமைந்துள்ளது. எம் கல்லூரி யானது தேசிய இளைஞர் விவகார திறன் அமைச்சின் செயற்பாடுகளால் நிர்வகிக்கப்படும் ஓர் கல்லூரியாகும். இக்கல்லூரியானது எமது பிரதேச மாணவர்களின் வாழ்வில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது எனில் அது மிகையாகாது. ஏனெனில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்தும் ஓரிரு வெட்டுப் புள்ளிகளால் பல்கலைக்கழகம் மற்றும் நுண்கலைப் பீடத்திற்குத் தெரிவு செய்யப்படாமல் தவறிய கலைத்துறை மாணவர் களிற்கு ஓர் நல்ல வரப் பிரசாதமாக அமைந்துள்ளது. இரண்டு வருடப் பயிற்சி நெறியின் நிறைவில், பயிற்சியை நிறைவாகப் பூர்த்தி செய்த அனைத்து மாணவர்களுக்கும் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும். தேசிய இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சினால் நிர்வகிக்கப்படுவதால் இவை அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் களாகும்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி விஜயதசமியன்று இவ் இசைநடனப் பயிற்சிநெறி பற்றிய ஓர் அறிமுகக் கூட்டம் யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது. அதில் இப்பயிற்சி நெறி பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டதுடன் இதற்கு தகுதியுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப் பட்டன. மிகக் குறுகிய காலத்துள் ஏராளமான மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். எமது கல்லூரியின் இசை, நடன விரிவுரை

யாளர்களினால் தகுதி வாய்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 12-10-2011 அன்று முதலாவது இசை நடன வகுப்புக்கள் யா/ இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன. இசைத்துறையில் கிட்டத்தட்ட 60 மாணவர்களும் நடனத்துறையில் கிட்டத்தட்ட 50 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இசைத்துறை விரிவுரையாளராக திருமதி. கமலராணி ஜெயபாலசிங்கம் (அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்) அவர்களும் மற்றும் நடனத்துறை விரிவுரையாளர்களாக திரு. நடராஜா குமரவேள் (ஆசிரியர், யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), திருமதி. ஜெயந்தி சுகிர்தன் (ஆசிரியை, யா/ஏழாலை மகா வித்தியாலயம்) ஆகியோரும் தம் அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றனர்.

இந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் எமது கலைக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு இடங்களில் தமது கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றியுள்ளனர். இசைத் துறை மாணவர்கள் முதன் முதலாக தமது கலை நிகழ்ச்சியை மானிப்பாய் நகராட்சி மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் விருதுவிழாவில் அரங்கேற்றினர். நடனத்துறை மாணவர்கள் முதன் முதலாக தமது நடன நிகழ்ச்சியை யா/இராமநாதன் கல்லூரியில் அரங்கேற்றினர். மேலும் எமது மாணவர்களின் இசை, நடனக் கலை நிகழ்ச்சிகள் யாழ் இந்துக் கல்லூரி, யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம், பருத்தித்துறை, யாழ்ப்பாண மகளிர் தின நிகழ்வு, கைதடி நவீல்ட் பாடசாலை நட்புறவுப் பாலம் நிகழ்வு, அச்சுவேலி முருகன் கோயில் வருடாந்த மகோற்சவம் போன்ற உள்ளூர் பிரதேசங்களில் மட்டுமல்லாது, கொழும்பு, மகரகம (தேசிய இளைஞர் விருது வழங்கல் விழா), கண்டி (பெல்வூட் நுண்கலைக் கல்லூரி) கிளிநொச்சி (பொங்கல் விழா மற்றும் Murali Cup நிகழ்வு) போன்ற வெளி மாவட்டங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இசை மற்றும் நடனத்துறை மாணவியர் ஆறுபேர் கொழும்பு ரூபவாஹினித் தொலைக்காட்சி நடாத்திய விளையாட்டு வினாடி வினாப் போட்டியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சென்ற ஆண்டின் இறுதிப் பகுதியில் கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் கலை நிகழ்ச்சிகளை வழங்கும் பொருட்டும் நுவரெலியாவில் நடைபெற்ற புத்தாண்டு தின விழாவில் கலந்து கொள்ளும் முகமாகவும் எமது கல்லூரியின் விரிவுரையாளர்களும் மாணவர்களும் இணைந்து ஓர் சுற்றுலா சென்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் எமது கல்லூரியில் பொங்கல் விழா, ஒளி விழா போன்ற விழாக்களை விரிவுரையாளர்கள், மாணவர்கள் இணைந்து கொண்டாடியுள்ளமை சிறப்பம்சமாகும். இவ் ஓராண்டில் எமது கல்லூரி மாணவர்களில் சிலர் தொழில் நிமித்த மாகவும், திருமண பந்தத்தில் இணைந்ததாலும் எம்மிடமிருந்து விடை பெற்றுச் சென்றுள்ளனர்.

ஒரு வருட குறுகிய காலப் பகுதியில் துரித வளர்ச்சி கண்டுள்ள எமது கல்லூரியானது மேன்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்றும் எமது மாணவர் கள் அனைவரும் சிறந்த கலைஞர்களாக மிளிர வேண்டுமெனவும் எமது ஆசான்களின் ஆசிகளையும் இறைவனின் இன்னருளையும் வேண்டி மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

காப்பாளர்,

திருமதி. மகாலக்ஷ்மி ஜெயநாதன்



# இசை எனும் தெய்வீகக்கலை

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்"

இப்பாடலில் இருந்து நம் முன்னோர் கலைகளை அறுபத்து நான்கெனப் பகுத்துள்ளனர் என அறிகின்றோம். கலைகளை சாதாரண கலைகள் என்றும் நுண்கலைகளென்றும் இரு பெரும் பிரிவு களாகப் பிரிக்கலாம். அவற்றுள் சங்கீதம், நடனம், சித்திரம், சிற்பம் போன்றவை நுண்கலைகளுள் அடங்கும். இக்கலைகள் உள்ளத்தில் ஒருவகை உணர்வை உண்டுபண்ணி இன்பமளிக்க வல்லனவாகும்.

செவிக்கும் மனதிற்கும் இன்பத்தைத் தரும் தெய்வீகக் கலையே இசையாகும். இதனை கானம் கீதம், சங்கீதம் என பலவாறு அழைப்பர். இன்பத்திலும், துன்பத்திலும், பிறப்பிலும், இறப்பிலும் இசைஞானம் இசைக்குக் கட்டுப்பட்டு இன்பமடையாத உயிர்களே இல்லை எனலாம். மனிதனை உருக வைப்பதாலும், இசைய வைப்பதாலும் இக்கலையே இசைக்கலை என்கின்றோம்.

இசைக்கலை மிக உன்னதமான உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. கேட்பவரின் உள்ளத்தை இசைவிப்பதால் இக்கலைக்கு இசைக்கலை என பண்டையோர் பெயர் வைத்தமை சாலவும் பொருத்த மாகும். ஏனைய கலைகளை, கற்றுணர்ந்த பெரியோரே கண்டும், கேட்டும் அனுபவிக்க முடியும். இசைக்கலை ஒன்றினையே கற்றோர், கல்லாதோர் என எவ்வித வேறுபாடுமின்றி அனுபவிக்க முடியும்.

சங்கீதம் இதய சுத்தியினையும், அறிவுத் தெளிவையும் மகிழ்ச்சி கரமான உணர்ச்சிகளையும் உண்டாக்குகிறது. இராகங்களின் அழகிய ஸ்வர சேர்க்கைகள் இதயத்தில் அழகிய உணர்ச்சிகளை எழுப்புகின்றன. இவ்வாறான அழகிய இசை உணர்ச்சிகள் மனதில் எழும்போது தீய உணர்ச்சிகள் மனதினை நெருங்காது விலகிவிடுகின்றன. உணர்ச்சி களும், செயலும் ஒன்றோடொன்று இழையோடியிருப்பதால் தூய செயல்களையே மனிதன் மனத்தாலும் செயலாலும் செய்வான். தீய செயல்களை மன் எண்ணாது. இவ்வாறு மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கும்

திறமை வாய்ந்த சக்தி, தெய்வீகம் பொருந்திய இசைக்கு இயல்பாகவே உண்டெனப்பதில் வியப்பேதுமில்லை.

மானிடரல்லாத பல உயிரினங்களும் பச்சிளம் பாலகர்களும் பாட்டின் பொருள் உணர்ந்து நயப்பதில்லை. பாடலின் ஒலி நயத்தைக் கேட்டே நயக்கின்றது. மொழி எதுவாக இருந்தபோதிலும் அம்மொழியின ரின் இசையைக் கேட்டு நயக்க முடியும். இதற்கு எடுத்துக்காட்டாகத் தியாகராஜஸ்சுவாமிகள் தெலுங்கு உருப்படிகள் யாவற்றையும் தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் தென்னிந்திய மக்கள் எல்லோரும் கேட்டு மகிழ்வெய்துகின்றனர். இருந்தும் இசை கற்கும் சிறுவர்களாகிய நாம் முதலில் சிறிய கீதம், நாட்டுப்பாடல், வர்ணம் ஆகிய பாடங்களைத் தமிழ்ப்பாடல்களாகக் கற்றுக்கொள்வது இலகுவாகவும் நன்மை தருவதாகவும் இருக்கும்.

மனதை மகிழ்விக்கும் நாதம், ஒலி நிலையாகிய சுருதி, இவற்றைக் கட்டுப்படுத்தும் தாளமும் இசைக்கலைக்கு வரம்பாகவும், மெருகூட்டும் சாதனங்களாகவும் திகழ்கின்றன. கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதங்கள் என்பன சங்கீதத்தின் இருபெரும் பிரிவு களாகும். எம்மதம், மொழி, இனமாக இருப்பினும் இசையாயின் மனிதன் அதனை விரும்பி இரசிக்கின்றான். வீணை, புல்லாங்குழல், வயலின் போன்ற இசைக்கருவிகளால் எழுப்பப்படும் இசையும் கூட மனிதனிடம் ரஞ்சனையை உண்டுபண்ணுகின்றன.

**ஸ்ரீமதி கமலராணி ஜெயபாலசிங்கம்**
**இசைத்துறை விரிவுரையாளர்.**





# நாட்டார் பாடல்

கிராமிய இசை நமது கிராமத்து மக்களின் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. நாகரீகம் வளராத எளிய மக்களால் இது மிகவும் எளிதாகப் பாடக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இது படிப்பறிவில்லாத கிராமத்து மக்களின் தினசரி வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமைந்து அவர்களைப் பரவசப்படுத்தி அவர்களை தம்பால் ஈர்க்கும் கலை ரசனையைக் கொண்டுள்ளது எனவே கிராமிய இசையில் உணர்ச்சி, ஓசை, இன்பம், தாளக்கட்டு, சொல்அழகு ஆகியவை எல்லாம் நிறைந்திருக்கிறது. பயிற்சி பெறாத குரல்கள் பாடுவதற்கு ஏற்றவகையில் கிராமியப் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இக்கிராமியப் பாடல்கள் வழியாக கிராமமக்களின் கற்பனைத் திறனையும் நகைச்சுவை உணர்வுகளையும் அறியலாம். கிராமியப் பாடல்கள் தொட்டில் முதல் சுடுகாடுவரை பாடப்படும் பாடல்களாகும்.

கிராமியப் பாடலை நாம் "கிராமிய இசை" கிராமப்புறத்து இசை, நாட்டுப்பாடல், நாட்டுப்புறப்பாடல், நாடோடிப்பாடல், நாட்டார் பாடல், பாமரப்பாடல், பாமர இசை, பாமரகானம், பரம்பரைப்பாடல், செவிவழிப் பாடல், ஏட்டில் எழுதாக்கவிதை, பொது இசை எனப்பலவாறு சிறப்பித்து அழைக்கின்றோம். மேற்கண்ட கிராமியப் பாடல்கள் மனிதனுடைய சமுதாய வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை எல்லா நிலைகளிலும் பாடப்படுகின்றன எனவே இதனை நாம் தாலாட்டுப்பாடல், குழந்தைப் பாடல், காதல்ப்பாடல், தொழில்பாடல், கொண்டாட்டப்பாடல், மண வாழ்த்துப்பாடல், பக்திப்பாடல், ஆட்டப்பாடல், கதைப்பாடல், ஒப்பாரிப் பாடல் என்று என்று 10 வகைப்படுத்தலாம். இவற்றின் மனிதவாழ்க்கை யோடு மிகவும் பின்னிப்பிணைந்த திருமணப்பாடல், பரிகாசப்பாடல், லாலிப்பாடல், வளைகாப்புப்பாடல் போன்றவற்றைக் குடும்பப்பாடல், கோலாட்டப்பாடல்கள் போன்றவற்றை சமூகப்பாடல்கள் எனவும் வகைப் படுத்தியுள்ளனர். தொழிற்பாடல்களில் வரும் விவசாயப்பாடல்ளை ஏற்றப் பாட்டு, ஏர்ப்பாட்டு, நடவுப்பாட்டு, களையெடுப்புப்பாட்டு, அறுவடைப் பாட்டு, கதிரடிப்பாட்டு என்றும் அழைப்பர். இதற்கு எடுத்துக்காட்டாக "அரிவிவெட்டப் போறேன் பெண்ணே, எழுந்துவாங்கோ தேயிலை கொழுந்து கொய்ய" போன்றவற்றை நோக்கலாம்.

கிராமிய இசையில் பல்வேறு மெட்டுக்களை நாம் காணலாம். அவற்றில் முக்கியமானவை சிந்து, ஓடம், லாவணி, ஆனநதக்களிப்பு, கட்கா, சவாயி போன்றவையாகும். பழமையான தமது கிராமிய இசைப்பாடல்களில் நீலாம்பரி, புன்னாகவராளி, ஆனந்தபைரவி, நாதநாமக்கிரியா, குறிஞ்சி, நவரோஜ், செஞ்சுருட்டி, சிந்துபைரவி, பைரவி, முகாரி, மோகனம், ஆகிரி, சகானா, கீரவாணி, கரகரப்ரியா, தோடி, சங்கராபரணம், நடபைரவி போன்ற இராகங்கள் அதிகமாக கையாளப்படுகின்றன. இதனைப் போல ஆதிதாளம், ஏகதாளம், ரூபகதாளம், சாப்புதாளம் போன்றவை இடம் பெற்றுள்ளன. கிராமிய இசையில் அதிகமாக தாளவாத்தியங்களே பயன்படுத்தப்படுகின்றன. உடுக்கை, தப்பு, டோல், குடம், பம்பை, சங்கு, புல்லாங்குழல், மகுடி, நாகசுரம், துந்தினா, சிப்பனாக்கட்டை போன்றவாத்தியங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

மனித வாழ்க்கையில் இக்கிராமிய இசை பின்னிப்பிணைந் திருப்பது ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும். இசையின் தோற்றத்திற்கு இக்கிராமிய இசையே வித்திட்டதெனலாம். இக்கிராமிய இசை வாழ்வில் இடம்பெறும் சந்தரப்பங்களுக்கு எடுத்துக்காட்டாக

தாலாட்டுப்பாடல் - கண்ணே நீ மெத்தையில் படுத்துறங்க.......!
ஒப்பாரிப்பாடல் - தாலிக்கு அரும்பெடுத்த தட்டானுக்கு கண் குருடோ
ஏற்றப்பாட்டு - மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே......."
வண்டிக்காரன் பாட்டு - பாட்டுக்குப் பாட்டெடுப்பேன்......
நலங்குப் பாட்டு - நலுங்கிட வாரும் கண்ணா ...............!
லாலிப் பாடல் - பிள்ளை பதினாறும் பெற்று பெருவாழ்வு .........!
தத்துவப் பாடல் - நந்தவனத்தில் ஓர் ஆண்டில்......!

போன்றவற்றைக் கூறலாம். இவ்வாறு மனித வாழ்வில் எல்லாச் சந்தரப்பங்களிலும் இக்கிராமிய இசை தழுவியுள்ளதை மறுக்க முடியாது.

**ஸ்ரீமதி. மகாலக்ஷ்மி ஜெயநாதன்**
**கர்நாடக சங்கீத விரிவுரையாளர்**
**(தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இசை நடனக் கல்லூரி)**
**ஆசிரியை (யா/ இராமநாதன் கல்லூரி)**

# நாட்டியத்தின் தோற்றம்

ஆதிபராசக்தியானவள் அண்டசராசரங்களைப் படைத்த பின்னர் பூமியையும் படைக்கிறாள். இவ்வாறு படைக்கும்போது ஆவேசமாகவும் மனக்குமுறலுடனும் படைத்தபோது அது சூரியனாகவும் அமைதியாகப் படைத்தபோது சந்திரனாகவும் கனிந்த மனத்துடன் படைக்கும்போது பூமியாகவும் அவளது படைப்புக்கள் உருப்பெற்றன. அண்டங்களைப் படைத்த பூவுலகையே விரும்பி அங்கு சஞ்சரிக்கிறாள். அப்போது தான் தனத்து இயங்குவது குறித்து மனம் வருந்தி தனக்குத் துணையாக மூன்று தேவங்களில் சிவந்த மேனியுடைய மிக அழகிய தோற்றமும் ஜடை முடியுடனும் காட்சி தந்த சிவபெருமானைத் தன் துணையாகத் தேர்ந்தெடுக்கிறாள். சிவபெருமான் தன்னைப் படைத்த பராசக்தியானவள் தனக்குத் தாய் போன்றவள் என்றும், மீண்டும் அவள் பிறந்தால் அவளைப் பார்வதி என்ற பெயருடன் சக்தியானவள் பிறந்து பரமசிவனை மணந்து கயிலையில் தேவர்களுக்கும், யாவர்க்கும் அருள் பாலிக்கின்றாள்.

தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி கைலாசத்திற்கு வந்து தங்களின் மனம் எப்போதும் ஏதோ சஞ்சலத்தில் இருப்பதாகவும் உடலும் உள்ளமும் மகிழ்ந்திருக்க செய்யும் வல்லமையுடைய ஏதேனும் ஒன்றை இறைவனாகிய சிவபெருமான் உருவாக்கித் தர வேண்டும் என்றும் கேட்டார்கள். அப்போது சிவபெருமான் கையிலிருந்த உடுக்கையை அசைத்து ஒலியெழுப்பினார். உடுக்கையில் எழுந்த அந்த ஓங்கார ஒலியானது அங்கிருந்த அத்தனை தேவர்கள் மனதிலும் ஒருவித உற்சாகத்தினைத் தந்தது. உடுக்கையினால் எழுந்த ஓங்கார ஒலிக்கேற்ப சிவபெருமான் தனது உடலை அசைத்து ஆடலானார். அவர் ஆட ஆட அவர் உடலில் இருந்த ஆடை ஆபரணங்கள் ஆடின. உடனிருந்த தேவர் களும் அவருக்குத் துணையாகப் பாடலைப் பாடினார்கள். ஆடலுக்கு அரசனான பரமசிவன் ஆட சடை ஆடியது. பிறை ஆடியது. அரவம் ஆடியது. அவனது நீண்ட மெல்லிய புருவம் அசைய அவன் பூசியிருந்த திருநீறும் அசைந்தது. இனிமையான சலங்கையின் நாதம் கயிலை எங்கும் எதிரொலித்தது.

இப்படி அமைந்த நாட்டியம் தான் முதன் முதலில் ஆடப்பட்ட நாட்டியமாகும். சிவனின் ஆடலிலே அண்டங்கள் அசைந்தன. கடல் ஆர்ப்பரித்தது. இதனால் தேவர்கள் அஞ்சி மகாதேவனிடம் தாங்கள் ஆடிய திருநடனத்தால் கடலும் அண்டங்களும் கோள்களும் கலங்கி விட்டன. அதனால் சாந்தமும் நளினமும் நிறைந்த நாட்டியத்தை ஆடிக் காட்ட கேட்டுக்கொண்டார்கள். அதற்கமைய பரமசிவன் நளினமாகவும் ரம்மியமாகவும் கொடிபோல இடையை வளைத்து ஆடலானார். இவ்வாறு ஆடியமையால் அது லதா தாண்டவம் என்றனர். முதல் ஆடிய நடனத்தில் ருத்திரம் இருப்பதால் அது ருத்த தாண்டவம் என்று அழைக்கப்பெற்றது. சிவன் பார்வதியின் வேண்டுகோளின்படி நளினமான அசைவுகளைக் கொண்ட நடனத்தைப் பார்வதிக்குக் கற்றுக் கொடுக்க சக்தியும் அந்நாட்டியத்தை ஒயிலாக ஆடினாள்.

சிவசக்தி நாட்டியத்தை கண்ணுற்ற தேவர்கள், சிவனிடம் இந் நாட்டியக்கலை உலகெங்கும் பரவ அருள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு மகாதேவன் தான் ஆடிய ஆடலைத் தாண்டவம் என்றும் பார்வதிக்கும் கற்றுக்கொடுத்தார்.

அந்த நடனம் லாஸ்யம் என்று தேவர்களுக்குக் கூறி அங்கிருந்த பரத முனிவர் அதனை தனது சீடர்களுக்கு உபதேசிக்கும் பொருட்டு நாட்டிய சாஸ்திரம் என்ற நூலை எழுதினார். பார்வதி தனது தோழியான உஷை என்பவருக்கு நாட்டியத்தைக் கற்றுக்கொடுக்க உஷை தேவலோக மாதர்களுக்கும் கந்தர்வலோக மாதர்களுக்கும் கற்றுக் கொடுத்தாள். அதேபோல் பரத முனிவரிடம் பயின்ற சீடர்கள் உலகெங்கும் பிரிந்து சென்று நாட்டியத்தைப் பரப்பினர்.

இவ்வாறு தோற்றம் பெற்றுப் பரவிய நடனங்களில் பரதநாட்டியம் முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. பாவம், ராகம், தாளம் என்ற மூன்று வார்த்தைகளில் முதல் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து பரதம் என்ற பெயர் உருவானதாகவும் பரத முனிவரால் பரப்பப்பட்டதாலும் பரதம் எனும் பெயர் உருவானதாகவும் கூறப்படுகின்றது.

**செல்வி. இ.ரேனியா**
**நடனத்துறை மாணவி**
**1ம் வருடம்.**

# சைவத்தின் கண்கள் திருமுறைப் பண்களே

ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் ஈடேற்றும் சாசன மாக இறை வழிபாடு அமைகின்றது. இறைவனை இசை பாடி வழிபடுவதே சிறந்த வழிமுறையாகும். நாம் ஒவ்வொருவரும் எம் ஐம்புலன்களை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தும் இடமாக ஆலயங்கள் விளங்கு கின்றன.

திருமுறைகள் இறை இன்பத்தை அளித்து சிந்தனையைத் தூய்மையாக்கி பக்தியை மெருகூட்ட வல்லன. ஒவ்வொருவரும் சைவர் களாக வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின் பன்னிரு திருமுறைகளிலும்; பதின்னான்கு மெய்கண்ட சாஸ்திரங்களிலும் ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டு இருப்பதோடு பாசுரங்களைப் பொருள் விளங்கும் வண்ணமும், தெய்வீகத் தன்மையுடனும், பண்களுக்குரிய ராகங்களுடனும் பாடுவதே இசையின் நோக்கம் ஆகும்.

இவ்வாறு இறைவனைப் புகழ்ந்து பாடுவதால் ஒவ்வொரு வருடைய உள்ளங்களில் அமைதி, சந்தோசம் போன்ற நற்பண்புகள் உண்டாகும். சைவத்தின் கண்மணிகள் எனச் சிறப்பிக்கப்படும் திருமுறைப் பண்களை அழியாது பாதுகாப்பது ஒவ்வொரு சைவ சமயிகளின் தலையாய கடமைகளாகும்.



செல்வி.சி.கங்கானந்தி
இசைத்துறை மாணவி
1ம் வருடம்.

# சங்க இலக்கியங்கள் சுட்டும் சடங்குகளும் ஆடல்களும்

தமிழில் உள்ள காலத்தால் முந்திய நூல்கள் சங்க நூல்கள் எனக் கொள்ளப்படுகின்றன. இவற்றிலே எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் அடங்குவன. இவற்றின் காலம் ஏறக்குறைய கி.மு. 2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 3ம் நூற்றாண்டு வரையுள்ள காலமாகும்.

இக்கால நடனங்கள் சமய உலகியல் சார்புள்ளனவாகவும் நிலவி வந்துள்ளன. இன்பம் அளிக்கும் அழகியற் கலைகளாகவும், பொழுது போக்காகவும், சடங்கு, இறை வழிபாடு முதலியவற்றிக்கான சாதனங்களாகவும் இசையும் நடனமும் விளங்கின. இக்கால நடனம் கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது. ஆடற்கலைஞரின் அழகிய தோற்றம் உறுப்புக்கள் அணிகள் முதலிய பற்றி குறிப்புக்கள் சங்க நூல்களில் உள்ளன. உள்ளி விழாவின் போது ஆடல் மகளீர் அணிந்த மணியோடு கூடிய மேகலை பற்றி அகநானூறு (368) குறிப்பிட்டுள்ளது. துடி இசைக்கத் திருப்பரங்குன்றிலாடிய ஆடல் மகளீர் பற்றிப் பரிபாடல் (21)

"துடியின் அடிபெயர்த்துத் தோளசைத்துத் தூக்கி
அடுநறா மகிழ் தட்ப ஆடுவான்" என

ஆடலைச் சமய தொடர்புடன் சிறப்பிக்கப்படுகிறது. எனவே நடனம் அக் காலத்திலிலே சமயத்தோடு ஒன்றிணைந்துள்ளதை அறிய முடியும். அத்தோடு கலையாக்கத்திற்குரிய பல வகையான கருவூலங்கள் தொன்மங்களிலே காணப்படுகின்றன. ஆய்வாளர்கள் தொன்மவியல் பற்றிய அறிவு இன்றியமையாததாகக் கொள்ளப்படுகின்றது. பூர்வீக மக்களின் அறிக்கைக் கோலங்கள், அனுபவ வெளிப்பாடு கற்பனைகள், நம்பிக்கைகள் அனைத்தும் தொன்மங்களாக அமைந்துள்ளது. இது இனக்குழும அணுகுமுறையானது. இவ்வாறு பரம்பரை பரம்பரையாக சங்க காலம் தொட்டு ஆடல்களும் சடங்குகளும் இன்று வரை நடைமுறையிலுள்ளதை அவதானிக்கலாம். இவ் ஆடல்களும் சடங்குகள் பற்றி பின்வரும் சங்ககால நூல்கள் வெளிப்படுத்துகின்றது.

இற்றைக்கு 2ம் நூற்றாண்டிற்கு முந்திய காலத்தினை சங்ககாலம் என்கிறோம். எனவே அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்களையே சங்க நூல்கள் எனக் கூறுவர். தமிழ்த்தாய் சூடியுள்ள மணிமுடிக்கு ஒப்ப விளங்குவது சங்க இலக்கியம் ஆகும்.

இக்கால சங்க நூல்களான எட்டுத்தொகை பத்துப் பாட்டும் குறிப்பிடத்தக்க நூல்களாகும். இதில் பத்துப்பாட்டை புலவர் எண்மரும் எட்டுத் தொகையை புலவர் பலரும் இயற்றியுள்ளனர். இதில் பத்துப்பாட்டு நூல்களாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப் பாட்டு
6. மதுரை காஞ்சி
7. நெடுநல்வடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

என்பனவாகும்.

தமிழகத்தில் சேத்தல் கூத்தனார். உறையூர் முதுக்கூத்தனார், மதுரைக் கண்ணன் கூத்தனார், மதுரைத் தமிழ்க்கூத்தன் புலவர் பெயர்களாக நெடுங்கூத்து மரபொன்று எடுத்தியம்புகிறது. சோனாட்டில் ஆதிமந்தியும், சேர நாட்டில் ஆட்டத்தினத்தியும் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் ஆடற்கலை வல்லவர் என்று சங்க இலக்கியச் செய்திகள் காட்டி நிற்கிறது. அரசர்களும் புலவர்களும் பயின்றார்கள் என்பதற்கு சங்க இலக்கிய செய்திகள் சான்று பகர்கின்றன. பத்துப் பாட்டில் ஒன்றான மலைபடுகடாம் - கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூலாக கொள்கிறது. எனவே அதற்கு கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

சங்க இலக்கிய நூல்களான எட்டுத் தொகைப் பாடலிலும் அக்கால ஆடல்கள், சடங்குகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் எட்டுத் தொகை நூல்களையும் அவதானிப்போம்.

1. கூத்தராற்றுப்படை
2. அகநானூறு
3. புறநானூறு
4. குறுந்தொகை
5. நற்றிணை
6. பதிற்றுப்பற்று

7. களத்தொகை
8. பரிபாடல்

என்பனவாகும்.

**சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஆடலும் பாடல்களும்.**

ஆரியக்கூத்து, குரவை வெறியாடல், துணங்கை வாடாவள்ளி, விறளியாடல் வள்ளைக்கூத்து, துடிதூங்கள், கறியாடல், பாவை ஆடல், குட்டத்து பாய்ந்தாடல், அருவியாடல், துடியாடல் வெறிக்கூத்து, வாள் அமலைக்கூத்து, கழல் நிலைக் கூத்து, கோடியர் கூத்து

என்ற ஆடல்கள் சங்க காலத்தில் கூத்தியர்களால் ஆடப்பட்டு வந்தமையைக் காண முடிகிறது. இவர்களுக்கு பெரும் வரவேற்பு இருந்தது. இவர்கள் அரச சபையில் ஆடிப்பாடி பரிசில்களையும் பெற்றார்கள். (புறம் 105:1) "கூத்தர் பரிசு பெறுகுவை வாணுதல் விறண்" (புறம் 107:1) "ஒளித்திகழ் முத்தம் விறலியர்க்கும் ஈவது" எனவும் "வண்டுகள் யாழிசைக்க அருவி முழவு கொட்ட ஆடல் பாடல் நடந்தது" என்பது பரிபாடல் (17:15) சிறப்பாகக் கூறிநிற்கிறது.

"ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ
ஒரு திறம் பாடலை விறலியர் ஒல்குபு நுடங்க"

என அக்கலை ஆடல் பாடல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

வெறியாடல் நிகழ்ந்த இடம், காலம், ஒப்பனை, ஆடியதன் காரணம் என்பது பற்றிய செய்திகளில் விளக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். பண்டைய காலத்தில் விழாக்களின் போது கூத்தர்கள் மக்களை தம் ஆடல், பாடல்களால் மகிழ்வித்தனர். பரதவர், குறவர் போன்ற மக்கள் பொழுது போக்கிற்காக ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர். இதனைத் தம் பிழைப்பாகக் கொண்ட இனத்தவரும் இருந்தனர். சங்க கால எல்லா துறைகளிலும் ஆடலும் பாடலும் சிறப்புற்றிருந்தன. அக்காலத்தில் ஆடப்பட்ட ஆடல் "வள்ளிக்கூத்து" இதனை தொல்காப்பியர் வாடாவள்ளி என்பர்.

"வாடாவள்ளியின் வளம்பல தருஉம்
நாடுபல கழிந்த பின்றை" - (பெரும்பாள் 370 - 371)

கூறுகிறது. குறவை மூங்கில் கள்குண்டு ஆடியதை புறநானூற்றில்,

"வாங்கமைப் பழுறிய நவ வுண்டு
வேங்கை முன்றிற் குரவையும் கண்டே" குறிப்பிடப்பட்டுள்ளது.

*தொடர்ச்சி 29 ஆம் பக்கம்*

## இசைத்துறை விரிவுரையாளர்கள்



ஸ்ரீமதி. மகாலக்ஷ்மி ஜெயநாதன்



ஸ்ரீமதி. கமலராணி ஜெயபாலசிங்கம்

## நடனத்துறை விரிவுரையாளர்கள்



திரு. நடராசா குமரவேள்



ஸ்ரீமதி. ஜெயந்தி சுகிர்தன்

## பக்க வாத்தியக்கலைஞர்



திரு. சு. ரஜீவன்



இசைத்துறை விரிவுரையாளர்களுடன் மாணவர்கள்



நடனத்துறை விரிவுரையாளர்களுடன் மாணவர்கள்



நல்லூர் இளங்கலைஞர் மன்ற இசைவிழாவில்...



கொழும்பு மகரகம தேசிய இளைஞர் விருது வழங்கல் விழாவில்...

பரதவர் வெப்புண்டு மதுவுண்டு தாளத்தோடு ஆடியதனை புறநானூறு

"தென் கடற்றிரை மிசை பாயுந்து
திண்டிமில்வன் பரதவர்
வெப்புடைய மண்குண்டு
தான்குரவைச் சீர் தூங்குவது


எனப் புறம் 24. 3-4 கூறி நிற்கிறது.

சங்க கால நடனங்களைப் பேராசிரியர் ச.வித்தியானந்தன் நான்கு வகைகளாக வகுத்துக் கூறியுள்ளார். அவையாவன,

நாட்டுக்கூத்து
சமயச் சடங்குக்குரிய ஆடல்
பேய் ஆடல்
பேர்கள ஆடல் ஆகும்.

சங்க நூல்களிலே முத்தமிழ் என்ற சொல் வராவிட்டாலும் இதற்கான கருத்துக்கள் வந்துவிட்டன. இசையும் கூத்தும் பிறந்தபொழுதே ஆடலும் தோன்றியிருக்கிறது என்பது அசைதல் என்று பொருள் படும் ஆடல் என்ற சொல்லும் புலப்படுத்துகிறது. எனவே சங்க கால கூத்துக்களில் எது பரத நாட்டியத்திற்கு முன்னோடியானது என அறிய வேண்டிய ஒன்றாகும்.

சங்க நூல்களிலே யாழ் (வில்யாழ்) சீறியாழ், பேரியாழ், பறை, முழவு, முரசம் பதலை தொண்டகம், ஆகுளி, தட்டை வெள்ளி, தடாரி, குழல், வயிர், பாண்டில், சங்கு முதலியன பயன்படுத்திய வாத்தியங் களாகும். சங்க இலக்கியங்களிலே கூறப்படும் வறலி, பாடினி ஆகியோரைப் பிற்காலத்தில் தேவதாசிகளின் முன்னோடிகள் எனக் கொள்ளலாம் என மேல்நாட்டவர் ஒருவர் குறிப்பிடுகிறார். இவ்வாறாக சங்க கால இலக்கியங்களில் ஆடல் பாடல், சடங்குகள் என்பன முக்கியத்துவம்



செல்வி. இ.சோபனா
நடனத்துறை மாணவி
1ம் வருடம்.


# கர்நாடக இசையில் பதங்களின் முக்கியத்துவம்

நாட்டியத்திற்குரிய இசைப்பாடல் வகைகளில் பதம் என்பதும் ஒன்றாகும். இப்பாடல்களில் தலைவன் தலைவி அல்லது நாயகன், நாயகி உறவில் ஏற்படும் பல்வேறு காதல் உணர்வுகளைச் சித்தரிக்கும் இசை வடிவமே பதமாகும். இவை சிற்றின்ப உணர்வைத் தருபவை போல் அமைந்திருப்பினும் அவை உயர்ந்த பேரின்ப தத்துவத்தை உணர்த்து வனவாகும்.

தலைவன் இறைவனாகவும் தலைவி பக்தையாகவும் தோழி குருவாகவும் நின்று வீடுபேறடையும் வழிகள் இப்பாடல்களில் மிக அழகுற உணர்த்தப்பட்டிருக்கும். பதம் என்பது பொதுவாக பக்திப் பாடலையே சுட்டி நிற்கும். இயலிசைப் புலவரின் சிறந்த ஆற்றல் பதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது எனலாம். பதங்களில் இறை அனுபவத்திற்குரிய காதலும், அன்பும் சாதனமாக அமைகின்றன. எனவே காதல் நிலையில் ஏற்படும் பயம், இன்பம், வீரம், அற்புதம், இழிவு, அவலம், நகை, நடுவு நிலை, கோபம் ஆகிய ஒன்பான் சுவைகளும் பதங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. இப்பல்வேறு உணர்வுகளையும் வெளிப்படுத்த பாடற் பொருளும் பாட்டின் இசையும், அபிநய பாவங்களும் பதங்களில் முதன்மை பெறுகின்றன. பதங்களை இயற்றுபவர்கள் தேர்ந்த மொழிப் புலமையும் தலைவன் தலைவி உறவுகள் பற்றிய ஆழ்ந்த உணர்வும் அலங்கார இலக்கணங்களில் சிறந்த அறிவும் பெற்றிருப்பதுடன் இராகச் சுவைகள் பற்றிய நுட்பமான அறிவும் அவசியம் ஆகும். இத்தகைய திறமைகளோடு இயற்றப்படும் பதங்கள் எளிமையாக இருப்பினும் ஆழ்ந்த உட்கருத்துக்கள் பொதிந்தவையாகக் காணப்படும். பதம் என்ற இசை வடிவம் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று அங்கங் களைக் கொண்டிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களை உடைய பதங்களும் உள்ளன. பதங்கள் பெரும்பாலும் காம்போதி, முகாரி, பைரவி, கல்யாணி, ஸாவேரி, தோடி, நீலாம்பரி, சைந்தவி, உசேனி, சங்கராபரணம், கானடா, அடானா போன்ற ராகங்களில் அமைக்கப்

பட்டுள்ளன. பதங்களில் தாள வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பதங்களில் அதிகமான சங்கதிகள் இருப்பதில்லை. கடினமான பிரயோகங்களும் இருக்காது. ஒவ்வொரு சரணமும் ஒரு தாதுவில் அமைந்திருக்கும். இவ் உருப்படியில் அபிநயங்கள் முதன்மை பெறுவதால் அவை "அபிநய பதங்கள்? என்றும் அழைக்கப்படுகின்றன.

நுட்பமான அக உணர்வுகளை பல்வேறு வகையில் கற்பனை செய்து கை முத்திரைகளாலும் முக பாவத்தாலும் உடல் அசைவுகளாலும் ஆடி அபிநயிப்போர் பாடல் பாடப்பட்ட சூழ்நிலையும் பாடற் பொருளுக் குரிய மன நிலையும் நன்கு உணர்ந்து ஆடுவது சிறப்பான அம்சமாகும். பொருத்தமான பாடல் வரியைப் பல தடவைகள் பாட பல்வேறு கற்பனைகளை பல வகைகளில் ஆடி அபிநயிப்பதற்கு பதங்கள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. பதங்களில் பாட்டுடைத் தலைவனாக இறைவன் சித்தரிக்கப்படுகின்றான். தமிழ்ப்பதங்களில் சிவன், முருகன் மற்றும் கண்ணனும் தெலுங்குப் பதங்களில் கிருஸ்ணனும் தலைவர்களாக போற்றப்படுகின்றனர். மன்னனையும் வள்ளலையும் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பதங்களும் உள்ளன. தமிழ், தெலுங்கு, வடமொழி, கன்னடம், மலையாளம், மராத்தி ஆகிய மொழிகளில் ஏராளமான பதங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதன் அழகை முன்னிட்டும் இது அமைக்கப்பட்டுள்ள இராக வடிவத்தை முன்னிட்டு இசையரங்குகளில் இறுதியில் பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்பதங்களை முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சரபாரதியார், மாம்பழக்கவிராயர், கனம் கிருஸ்ணையர், ஊத்துக்காடு வெங்கட சுப்பையா போன்றவர்களும் தெலுங்குப் பதங்களை சேத்ரக்ஞர், பரிமளரங்கர், கஸ்தூரி ரங்கர் ஆகியவர்களும் மலையாளப் பதங்களை இயற்றியவர்களில் ஸ்வாதித்திருநாள் மகாராஜாவும் பதங்களை இயற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.



செல்வி. க.சுவர்ணா
இசைத்துறை மாணவி
1ம் வருடம்.

# பார் போற்றும்
# பரதக்கலை

கலைமகள் அருள்நிறை கலைகளாம்
அறுபத்து நான்வகையில்
சித்திரமும் சிற்பமும் சங்கமித்து
இசையிலே இறைவனைக் கண்டு
அஞ்ஞானத்தை அகற்றி – பெரும்
மெஞ்ஞானத்தை அருள்வதாம் பரதக்கலை

தென்திசை நோக்கும் நடராஜதேவனால்
திக்கெட்டும் புகழ்மணம் பரப்பி
ஆனந்தக் கூத்தனால் ஆன்மாக்கள்
அடிபணிந்து என்றும்
மனம் மயங்கி மாந்தர்கள்
மகிழ்வதாம் ஆடற்கலை

ஏழிசையாய், இசைவடிவினனாய் இலங்கும்
இறைவனோடு, பண்ணும் பரதமும்
பரிணமித்து – கலைஞானத்தை
காண்பவர்கள் மகிழ்வுற வைத்து
மெய்மறந்து யாவரும் லயித்திடும்
வரமாம் இக் கவின்கலை

பாவம், ராகம், தாளம் இணைந்து
நிருத்த, நிருத்திய நாட்டியத்துடன்
பண்டிதரும் பாமரரும் இங்கிதமாய்
விளங்கி ரசிக்க ஆங்கிக ஆஹார்ய
வாசிக, சாத்விக அபிநயங்களுடன்
நயம்பட மிளிர்வதாம் நடனக்கலை

வானோர்களும், ஞானிகளும் போற்றிட
ஆடலரசன் தன் அணங்கு சகிதனாய்
தாண்டவ, லாஸ்யத்தினை உற்பவித்து
தரணியே வியந்திடும் ரஸங்களுடன்
கருத்தொருமித்து களிப்புறச் செய்வதுவாம்
இவ் இன்புறுகலை

உலகெங்கும் உயர்வாய் புகழ்ந்திட
ஊனினை உருக்கி உள்ளொளி
பரப்பி உவப்பிலா உவமைமிகு
பரதக்கலையே நீ வாழி! – நின்
புகழ் எங்கனும் ஓங்கிட இன்னும்
பரவி எம்முள்ளே இசைந்து வாழி!

**செல்வி. இ.நவசக்தியா**
**நடனத்துறை மாணவி**
**1ம் வருடம்.**



# மாணவர்களின் ஒழுக்கத்தில் கவனம் அவசியம்

உலகிலேயே அழிவில்லாத நிலையான செல்வம் கல்வி. அவ்வாறான உயர்ந்த, போற்றக்கூடிய கல்வியை கற்கும் மாணவச் செல்வங்களே நாளைய உலகின் நற்பிரஜைகள். அவர்கள் வாழ்க்கையில், வழிதவறி நெறி பிறழ்ந்து போகாமல் அவர்களை நல்ல ஒழுக்கமுடையவர்களாய், உத்தமர்களாய் வாழ வழி சமைத்துக் கொடுக்க வேண்டியவர்கள் பெற்றொரும், ஆசிரியரும், பெரியோருமே. மாணவர்களின் உடல், உள சமூக நலன்களில் மிகவும் விழிப்பாகவும் அக்கறையாகவும் இருக்க வேண்டியவர்கள் இவர்களே.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

என்ற பொய்யமொழிப்புலவர் வாக்கிற்கிணங்க எமது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டியது சிறந்த ஒழுக்கமேயாகும். இவ் ஒழுக்கம் குன்றின் நமது சமூகம் சீரழிந்து மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாகிவிடும். இதை நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உருண்டோடும் இன்றைய நவீன உலகில் மாணவர்களின் ஒழுக்கம் பலதரப்பட்ட வழிகளில் திசைமாறி சீர்கெட்டுச் செல்வதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதாவது பெற்றோர், ஆசிரியரின் கண்காணிப்பு சரியாக இல்லாத பட்சத்தில்தான் அங்கு தான் செய்வது எல்லாம் சரியென்று எண்ணி தான் எதையும் செய்யலாம் என்ற நிலைக்கு மாற்றப்படுகின்றனர். பிள்ளைகள் எதைச்செய்கிறார்கள்? எப்படிச் செய்கிறார்கள்? அவர்கள் செய்யும் செயல்கள் சரியானவையா? அல்லது பொருத்தமற்ற செயல்களா? என்பதில் மிகவும் விழிப்பாக இருந்து அவ்வப்போது நல்லவை எவை? தீயவை எவை? என எடுத்துரைத்து நேரிய வழியில் இட்டுச் செல்ல வேண்டியது மிக அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி தவிர்ந்த ஏனைய விடயங்களிலும் விழிப்பாக இருப்பது அவசியம். பெற்றோர்களும் பிள்ளைகளது உணவு, உடை, கல்வி போன்ற விடயங்களில் மட்டும் அக்கறை காட்டாது ஒழுக்கம் சம்மந்தமான விடயங்களில் மிக மிக அக்கறையோடு இருந்து அவர்களை வழிநடத்துவது அவசியம்.

இன்றைய நவீன உலகின் தேவைக்கு ஏற்ப மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளவும் பல சாதனங்களையும், கருவிகளையும் ஆக்கியுள்ளான்.

அதாவது தொலைபேசி, கணினி, இணையம் போன்ற தொடர்பாடல் ஊடகங்கள் வீட்டுக்கு வீடு பரவிக் காணப்படுகின்றன. இவற்றில் நல்ல விடயங்களை மட்டுமே பெற்றுப் பயனடைய வேண்டும். ஆனால் இன்று பெற்றோரின் கவனக்குறைவால் பிள்ளைகள் இவற்றைத் தீய வழிகளில் பயன்படுத்தி சீரழிந்து போவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளுக்கு அப்பாற்பட்டு அவர்களின் விருப்பத்திற்கு இணங்க கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கிறார்கள். அவர்கள் அவற்றில் தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுவதோடு தாம் செல்லும் இடமெல்லாம் எடுத்துச் செல்கின்றனர். அத்துடன் வீட்டில் தொலைக்காட்சியில் தமக்குப் பொருத்தமற்ற காட்சிகள், ஆபாசப்படங்கள் என்பவற்றைப் பார்த்தல், கணினியிலும் பொருத்தமற்றவற்றைக் கற்றல், இணையத்திலுள்ள தவறான, தேவையற்ற விடயங்களில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகள் மாணவர்களின் ஒழுக்கம் சீர்கெட்டுப் போவதற்கு காரணமாக அமைவதுடன் அது அவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் பாதிக்கின்றது. இதனால் அவர்களுடைய மனநிலையானது ஒருநிலைப்பாடின்றி அலைபாய்ந்து கொண்டிருக்கின்றது.

மாணவர்கள் வாழும் சூழ்நிலையானது இப்போது மாறி வருகின்றது. அமைதியை இழந்து நிற்கின்றது. தொலைக்காட்சியில் வரும் தொடர் நாடகங்கள், படங்கள் என்பவற்றைப் பார்த்து தமது கலாசாரம், பண்பாடு என்பவற்றை மறந்து நிற்கிறார்கள். தமது வயதிற்கும் அப்பாற்பட்ட வயது கூடிய நண்பர்களுடன் உறவை வளர்த்துக்கொள்வதால் அவர்களிடம் காணப்படும் தீய பழக்கவழக்கங்களை இவர்களும் பின்பற்றுகிறார்கள். எனவே இவற்றை முளையிலேயே கிள்ள வேண்டியவர்கள் பெற்றோரும், ஆசிரியருமே. தமது சமூகத்திலும், நாட்டிலும் உள்ள நல்லொழுக்கம் கொண்ட பெரியோர்களை சுட்டிக்காட்டி முன்னுதாரணப்படுத்தல் நன்று. பாடசாலைக் காலத்தில் இருந்தே இவர்களை கண்டிப்புடன் வளர்ப்பது அவசியமாகின்றது.

இன்றைய கால கட்டத்தில் எல்லாப் போதைப் பொருட்களும் மலிந்து விட்டன. எங்கும் கிடைக்கின்றன. இலகுவாகவும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. மாணவர்களுக்குத் தேவைக்கு மட்டுமே பணம் கொடுப்பது அவசியம். அவர்கள் விருப்பத்திற்கு பணம் கொடுப்பதால் அதை தமக்கு பொருத்தமற்ற வகையில் செலவு செய்வதை அவதானிக்க முடிகிறது. அறிந்தும் அறியாமலும் தமது உணவில் போதை தரும் உணவுகளைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அது மட்டுமன்றி அணியும்

ஆடைகளில் அநாகரிக ஆடைகளை அணிவது என்பனவும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றது. எமது நாட்டின் கலாசாரம் மிகவும் மதிப்பிற்குரிய ஒன்றாகும். எனவே மேற்கத்தேய முறைகளை விடுத்து எமது கலாசாரத்திற்கு ஏற்றவாறு உடை அணிவது முக்கியமானதாகும். நாம் அணியும் ஆடை நமக்கு நம்பிக்கையும், மரியாதையும் பெற்றுத் தரும் வகையில் அணிதல் அவசியம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு தெளிவாக விளக்க வேண்டும்.

இவ்வாறான பொருத்தப்பாடற்ற பழக்கவழக்கங்களால் பிள்ளைகள் சாந்தமான குணத்தைத் தவிர்த்து மூர்க்க குணம் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். எனவே ஆசிரியரும், பெற்றோரும் மாணவர்களுக்கு கருணை, அன்பு, ஜீவகாருண்யம் என்பவற்றை உதாரணங்களுடன் எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த வேண்டும். சில பிள்ளைகள் படிக்க வேண்டிய வயதில் வேலைக்குச் செல்வதால் சமூகத்தில் பல சீரழிந்த நிலையை அனுபவிக்க நேரிடுகின்றது. இதனால் அவர்களுடைய எதிர்காலம் பாதிப்படைகின்றது.

எந்தவொரு பிள்ளையும் பதினாறு வயது வரை கட்டாயம் படிக்க வேண்டும். அது கட்டாயக்கல்வி வயதாகும். இது தவிர பதினெட்டு வயது வரை பிள்ளைகள் சிறுவர் எனும் வகைக்குள் உள்ளடக்கப்படுவர்.

பிள்ளைகள் எப்படியும் வாழலாம் என்ற நிலையை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என அவர்களுக்கு ஒரு இலட்சியப் பாதையைக் காட்ட வேண்டும். அவர்களுடைய பார்வையை தூய பார்வையாக உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் எண்ணங்களும் சிந்தனைகளும் தூய்மையாக இருக்கும்.

மாணவர்களுக்கு ஒரு இலட்சிய பாதையை வகுத்து அந்த பாதையில் அவர்களை வழிநடத்திச் செல்லல் அவசியமாகும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் முதுமொழிக்கமைய சிறு வயதிலிருந்தே பிள்ளைகளை நல்வழிப்படுத்தி சீரயராக்கல் பெற்றோரினதும் ஆசிரியரினதும் பெரியோரினதும் கடமையாகும். மாணவர்கள் நாளைய சமுதாயத்தினை தாங்கும் தூண்கள். அவர்களை நற்பிரஜைகள் ஆக்குவதே ஒவ்வொரு ஆசிரியரதும் பெற்றோரினதும் நோக்கமாக அமைய வேண்டும்.

**செல்வி. M.திரேகா**

**இசைத்துறை மாணவி**

**1ம் வருடம்.**

# நடனம்

நடனம் என்பது பொதுவாகத் தாளத்துக்கும் இசைக்கும் அமைவாக உடலை அசைத்து நிகழ்த்தப்படும் ஒரு கலை வடிவம். இது ஒரு விடயத்தின் வெளிப்பாட்டு வடிவமாகவே இருக்கலாம். நடனம் சமய சார்பு நோக்கங்களுக்காக ஆடப்படுபவையாக அல்லது பிறருக்கு நிகழ்த்திக் காட்டப்படுபவையாக இருக்கலாம். மனிதர் தமது எண்ணங்களை மற்றவர்களுடன் பரிமாறுவதற்கேற்ற ஒரு தொடர்பு முறையாக நடனத்தைக் கருதுவதுண்டு.

நடனம் என்பது எவ்வெவற்றை உள்ளடக்கியது என்பது குறித்துச் சமூக, பண்பாட்டு, அழகியல், கலைநெறி முறைகள் போன்றவற்றின் எல்லைகளை விளக்க முடியும். சில நாட்டுப்புற நடனங்கள் பயன்பாட்டுத் தன்மை, அசைவுகளை, உள்ளடக்கியிருக்க, பலே, பரதநாட்டியம் போன்ற நடனங்கள் பல்வகைக் கலை நுணுக்கங்களைக் கொண்டுள்ளன. சில வேளையில் சடங்குகள் தொடர்பாகவும் போட்டியாகவும், பாலுணர்வுத் தூண்டலாகவும் கூட நடனங்கள் ஆடப்படுவதுண்டு. அத்துடன், பல வகை நடனங்கள் கதை கூறும் பாங்கிலும் அமைவதுண்டு.

நடனங்கள் பல்வேறு பாணிகளிலும் உருவாகியுள்ளன. எனினும் எல்லா நடனங்களுமே தம்முள் சிறந்த சில பொது இயல்புகளைக் கொண்டுள்ளன. நடன அசைவுகளுக்கு ஏற்ப உடல் வளைந்து நெளிந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக இருப்பது மட்டுமன்றி உடல் உறுதியும் முக்கியமானது. இதனாலேயே முறைப்படியாக நடனம் ஆடுபவர்கள் நல்ல நீண்ட காலப் பயிற்சி எடுத்துக்கொள்கிறார்கள். நடனங்களை உருவாக்கும் கலை நடன அமைப்பு எனப்படுகிறது.

நடனம் என்பது கண்டிய நடனம், பரதநாட்டியம், நாட்டுக்கூத்து எனப் பல பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் நாட்டுக்கூத்துக்கள் 2 வகைப்படும். அதாவது வடமோடி நடனம், தென்மோடி நடனம் என்பவை ஆகும்.

பரத நாட்டியத்தில் வேப்பிலை நடனம், காவடி நடனம், பந்து நடனம், செம்பு நடனம், தேயிலைக் கொழுந்து நடனம், மீனவ நடனம், மயில் நடனம், பாம்பு நடனம், களகு நடனம், அரிவு வெட்டு நடனம் எனப் பல பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

இலங்கை வாழ் சிங்கள மக்களின் சாஸ்திரிய நடனமாகவும் பாரம்பரிய நடனமாகவும் கண்டிய நடனம், மலையக நடனம், கரையோரப் பிரதேச நடனம், சப்ரஹமுவ நடனம் என்பவை இலங்கையின் வடக்கு; கிழக்கு தவிர்ந்த மற்றைய பகுதிகளில் தமது செல்வாக்கினை நிலைநாட்டி நிற்கின்றது. கண்டிய நடனத்தின் பரத நிலையை “மண்டியை” என்பர். இது நாட்டியத்தின் “அங்கப் ப்ரம்மரி” இனை ஒத்தது. இது இரு கால்களையும் சற்று அகட்டி கையில் அர்த்தச் சந்திர முத்திரையினை இரு கைகளிலும் பிடித்தவாறு மேலும் கீழும் அசைத்தவாறு ஆடுவார்கள்.

ஆரம்ப காலத்தில் கண்டிய நடனம் சமய சடங்குகளில் கோவில் களில் ஆடப்பட்டு வந்தது. காலப்போக்கில் அவைக்காற்றுகைக் கலையாக இது உயர்நிலையை அடைவதைக் காண முடிகின்றது. இதில் “கண்டிப்பெரஹெரா” என்பது கி.பி. 300 ஆண்டுகளுக்கு முன்பே தொடக்கப்பட்டது.

**செல்வி. நீ.லக்சிகா**
**நடனத்துறை மாணவி**
**1ம் வருடம்.**



# தற்கால சங்கீதக்கலையின் குறைபாடுகளும், இக்கலை வளர்ச்சிக்குச் சில வழிமுறைகளும்

**குறைபாடுகள் :**

☆ பொதுவாக உண்மையான சங்கீத இரசனை மக்களிடத்தில் குறைந்து காணப்படுகின்றது. காரணம் பொறுமையாக இசையைக் கேட்டு அதனுடைய அம்சங்களை இரசிக்கக்கூடிய தன்மை குறைந்து விட்டது.

☆ கற்பனை இரசனையில் ஈடுபாடு குறைந்து வருகிறது. அதற்கு ஏற்றாற் போல் இசை அரங்குகளிலும் இராகம், தாளம், பல்லவி போன்ற வற்றைத் தவிர்க்க முயல்கிறார்கள்.

☆ திறமையுடன் பாட வேண்டிய கிருதிகளையும் அழகு நிறைந்த பாடல் களையும் பாடுவதைத் தவிர்த்து இரசிகர்களின் சுலபமான இரசிகத் தன்மைக்கேற்ப நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து செயல்படுகிறார்கள். இதனால் மிக அபூர்வமான உருப்படிகளையும், இசை வடிவங்களை யும் கேட்பதற்கே வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

☆ இசையைப் பரப்புவதில் வானொலி, திரைப்படம் தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் மிக்க துணை புரிந்தாலும் அதிகமாகப் பிற இசைகளை ஒலி பரப்புவதால் நம் நாட்டு இளைஞர், யுவதிகளுக்கு நம் நாட்டு பரம்பரைச் சொத்தான கர்நாடக இசை மேன்மையை அறிவதற்கு வாய்ப்புக் குறைந்துவிடுகின்றது.

☆ புதுமை என்ற பெயரில் ஒவ்வாத பல முறைகள் இன்று சங்கீதத்தில் புகுத்தப்பட்டு வருகின்றன.

☆ சில கிருதிகளை தவறான மெட்டுக்களில் சிலர் பாடியும் வருகின்றனர்.

☆ ஆலயங்களில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பக்திப் பாடல்கள் இசைக்கப்படுவது குறைந்து வருகிறது.

☆ ஒருவனுக்கு ஆலயம் அளித்து வந்த இசை விருந்து சுத்தமாகக் குறைந்துவிட்டது.

☆ இசை பயிலும் மாணவ மாணவியரிடம் குரு பக்தி மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

**இசை வளர்ச்சிக்கான வழிமுறைகள் :**

- கர்நாடக, இந்துஸ்தானி இசைக் கலைஞர்கள் இடையே தத்தமது இசைமுறைகளின் அட்சரங்களை பரிமாறிக்கொள்ளும் பரந்த மனப் பான்மை ஏற்பட வேண்டும்.
- நாட்டின் ஒற்றுமையை வளர்க்க சங்கீதம் ஒரு சிறந்த சாதனம் என்பதை உணர்ந்து அகில இந்திய இசை மாநாடுகள் மூலம் இசை பற்றிய கருத்துப் பரிமாற்றம் பெற வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.
- இசை சம்பந்தமான பத்திரிகைகள் வெளிவர வேண்டும்.
- இசை சம்பந்தமான ஆராய்ச்சிகளும் இன்னும் வளர வேண்டும்.
- இசைக்கருவிகளின் வளர்ச்சி அதிகப்படுத்த வேண்டும்.
- இசை மேதைகளின் சிறந்த அரங்கிசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து பாதுகாக்க வேண்டும்.
- முற்காலத்தில் அரசர்களும், ஜமீன்தார்களும் இசைக்கலைஞர்களை ஆதரித்தது போல் இன்றும் அரசும் பொதுமக்களும் அவர்களுக்கு முழு ஆதரவு தர வேண்டும்.
- கர்நாடக இசையை வாசிக்கும் கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்து உற்சாகப்படுத்த வேண்டும்.
- இசைத்துறை சம்பந்தமான எல்லா அம்சங்களையும் போற்றிப் பாதுகாத்து இசை வளர வழி காண வேண்டும்.

**செல்வி. செ.தர்சினி**
**இசைத்துறை மாணவி**
**Iம் வருடம்.**



# கலை இலக்கியம்

- முதன் முதலில் கலைக்களஞ்சியம் வெளியிட்ட நாடு பிரான்ஸ் உலகில் மிகப் பழமையான கலைக்களஞ்சியம் இயற்கை வரலாறு (Natural History)
- தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். தமிழில் முதலில் தோன்றிய குழந்தைகள் பத்திரிகை பாலதீபிகை (1840)
- ஜவகர்லால் நேரு சிறைக்குள் இருந்தபோது தனது மகளான இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் Discovery of india என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.
- உலகில் ஆகக்கூடிய பதிப்புரிமை பெற்ற ஒரே புத்தகம் Guiness Book (உலக சாதனைகளின் பதிவேடு) கின்னஸ் புத்தகம்
- தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் பிரதாப முதலியார் சரித்திரம் நீதிபதி மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை அவர்கள் இந்நூலை எழுதினார்.
- தமிழில் வெளிவந்த நூல்களில் ஆகக் கூடுதலாக பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே நூல் திருக்குறள்
- ஒரு யுகம் என்பது 4320000 ஆண்டுகளைக் கொண்டதென "ஆரியப்பட்டர்" எழுதிய "ஆரியப்பட்டீயம்" என்ற நூல் கூறுகிறது.
- உலகின் முதலாவது தமிழ்ப்புத்தகம் கிறிஸ்தவ வணக்கம்
- "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" எனும் தமிழ் மொழியில் நாலு என்பது நாலடியார் பாடல் இரண்டு என்பது திருக்குறள்
- தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நூல் மோகனாங்கி
- தமிழில் வெளிவந்த மாத இதழ் "மாசத்தின் சரிதை"
- முதன் முதலில் வெளிவந்த அகராதி "சதுர அகராதி"
- கர்நாடகக் கச்சேரி சங்கீதத்தின் பிதாமகர் "அரியகுட்டி இராமானுஜ அய்யங்கார்" முதல் இந்திய விருது பெற்ற வாய்ப்பாட்டுக்காரர்
- கவியரசு கண்ணதாசனின் இயற்பெயர் சாமுத்தையா. பல்லாயிரம் கவி நயமிகு திரைப்பாடல்களை இயற்றி உலகத் தமிழ் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

- தமிழ்ச்சிறுகதை இலக்கிய மேதையெனப் போற்றப்படுபவர் புதுமைப் பித்தன். இவரது இயற்பெயர் செ.விருத்தாசலம்
- தமிழ் நாடகத் தந்தையென போற்றப்படுபவர் - பம்பல் சம்பந்த முதலியார். இவராலேயே தமிழ் நாடகம் என்ற கலை வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஆசுகவி என அழைக்கப்படுபவர் ஈழத்துப் புலவர் கல்லடி சு.வேலுப்பிள்ளை.
- கவிஞர்களின் கவிஞர் என அழைக்கப்பட்ட ஆங்கில கவிஞர் எட்மண்ட ஸ்பென்சர் (1552 - 1599)
- "சிலம்புச் செல்வர்" என அழைக்கப்படும் தமிழக அறிஞர் ம.பொ.சிவஞானம்.
- உலகப் புகழ் பெற்ற பிறந்தநாள் பாடலை Mildred, Potty Hill என்ற சகோதரிகள் 1893இல் எழுதினார்கள். பின் இது Happy Birthday to you என்று மாற்றப்பட்டு உலகெங்கும் இன்றுவரை பிரபல்யம் பெற்று விளங்குகிறது.
- "மோனாலீசா" எனும் உலகப் புகழ் பூத்த பெண் ஓவியத்தை வரைந்தர் லியனார்டோ டாவின்சி (இத்தாலி)

  இவரது "இராப்போசனம்" எனும் ஓவியமும் மிகப் பிரபல்யமானது.
- "மிக்கி மவுஸ்" எனும் உலகப் புகழ் பெற்ற கார்ட்டுன் (கேலிச் சித்திரம்) வரைந்தவர் வோல்ட் டிஸ்னி (ஐக்கிய அமெரிக்கா)
- ஒலிவ் கிளை தாங்கிய வெண்புறாவை உருவாக்கியவர் பப்லோ பிக்காஸோ (ஸ்பெயின்) இவரது "கொர்னிக்கா" எனும் ஓவியமும் பிரபல்யமானது. பேசுவதற்கு முன் ஓவியம் வரையத் தொடங்கிய மேதை இவர் 1973இல் காலமானார்.
- கலைத்துறைக்கு பிரான்ஸ் நாட்டில் வழங்கப்படுகின்ற உயர் விருது செவாலியர். பிரான்ஸ் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த "நெப்போலியன் போனபார்ட்" என்பவரால் இவ்விருது உருவாக்கப்பட்டது.
- தென்னிந்திய சினிமா நடிகரான சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் அரசாங்கம் 1995ஆம் ஆண்டில் இவ்விருதை வழங்கிக் கௌரவித்தமை சிறப்பிற்குரியது.

**செல்வி. சு.சுவர்ந்தினி**
**இசைத்துறை மாணவி**
**1ம் வருடம்.**

# வரலாற்று ரீதியான நடனக்கலையின் வளர்ச்சி

ஒவ்வொரு கலைகளும் தமக்கெனத் தனித்துவமான வரலாற்றுப் படிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. இவற்றுள் உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உடற்கூறுகளால் புறத்தார்க்குப் புலப்படுத்தும் கலையாகிய ஆடல் கலையும் ஒன்றாகும். இக்கலை சிறப்பான ஒரு வரலாற்று எல்லையைத் தன்னத்தே உடையதாக விளங்குகின்றது. ஆதிமனிதன் வாழ்க்கை முறையில் ஆரம்பித்து படிப்படியாக வளர்ச்சி பெற்று மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் கலையாகவும் பெருவிருட்சமாகவும் வளர்ந்து காட்சியளிக்கின்றது. முற்காலததில் சதிர், சின்னமேளம், கூத்து, தேவதாசியாட்டம் போன்ற பல பெயர்களை உடையதாக ஆடல் காணப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட தெய்வீகக் கலையாக விளங்குவதே பரத நாட்டிய கலையாகும். பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்று கூறுகளையும் ஒருங்கே கொண்ட கலையாக பரதம் விளங்குகின்றது. இக்கலை இறைவனாலே தோற்றுவிக்கப்பட்டது என்ற ஐதீகக் கதையும் உண்டு. இதனாலேயே சிவனை ஆடற்கரசன் எனவும் கூத்தப்பிரான் என்றும் அழைக்கின்றார்கள். ஆதிமனிதன் தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல கருத்துப் பரிமாற்றங்களை தமது சைகைகள் மூலம் வெளிப்படுத்தினான். இவ்வாறு வெளிப்படுத்திய அசைவுகளே பிற்கால நடன முத்திரைகளாக அமைந்தன என்று கூறலாம். மேற்கூறப்பட்ட இரண்டு தோற்றுவாய்களையும் புராண வரலாறு, பூர்விக வரலாறு என்று கூறலாம். எனவே ஆதாரங்கள் உடனான வரலாற்றுக் காலங்களை நோக்குவோம்.

**சிந்துவெளிக் காலம்**

நடனத்தின் தொன்மை பற்றி கூறும் இடத்து முதன் முதலில் சிந்துவெளிக் காலத்தினைக் கூறலாம். இங்கு அகழ்வாராய்ச்சி செய்த பல அறிஞர்கள் இங்கு காணப்பட்ட உருவச்சிலைகள், முத்திரைகள், தாயத்துக்கள், வனைப்பொருட்களைக் கொண்டு இக்காலத்து ஆடற்கலையைப் போன்றதொரு முறை காணப்படுகின்றது என்று கூறுகின்றனர். இங்கு காணப்படும் எழுத்துகளின் பொருள் என்ன என்பது இன்றும் அறியப்படவில்லை. எனவே தொல்பொருள்களின் துணையுடனே இக்கால ஆடற்கலை பற்றி ஓரளவிற்கு அறிய முடிகின்றது. இக்காலத்தில் நடராசர் உருவத்தை ஒத்த ஓர் அமைப்பு

கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவை அக்கால மக்கள் நடனக் கலையில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் "வெண்கலத்தாலான நடன மாதின் நேர்த்தியான சிலை" ஒன்று அகழ்வின் மூலம் பெறப்பட்டுள்ளது. இச்சிலை இக்காலத்தின் நடனத்தின் செல்வாக்கினைக் காட்டி நிற்கின்றது எனலாம். தாயத்து ஒன்றில் "ஒருவன் மத்தளம் அடிக்க சிலர் நடிப்பது" போன்றதொரு அமைப்பு காணப்படுகினற்து. இது சமயத்துடன் நடனம் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது என்பதை உணர்த்துவதாக உள்ளது. பிறிதொரு தாயத்தில் முகமூடியுடன் பொய் வாலும் உள்ள ஒருவர் வணக்கத்திற்குரிய மிருகத்தின் முன் கிரியைக்கான நடனம் ஆடுவதாகவும் அமைந்துள்ளளது. மொஹெஞ்சோதாரோ, ஹர்பா ஆகிய நகரங்களில் சில பதுமைகளும், அவற்றின் ஆபரணங்களின் அலங்காரமும், இக்காலத்தே பெண்கள் அணிந்த ஆபரணங்களும் (நெற்றிப்பட்டம், காப்புகள், காதணிகள், மூக்கணிகள்) காணப்பட்டுள்ளன என்று "தீத்" என்ற அறிஞர் அகழ்வின் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். இசை சம்பந்தமான கருவிகளும் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி போன்ற வடிவங்களாவன பல வாத்தியங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது இசையும் இக்கால்த்திலே நிலவியிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதாகும். இக்கால இசையும் நடனமும் சமய நோக்கிலும் உலகியல் வாழ்வின் அடிப்படையில் இடம் பெற்று வந்துள்ளது எனலாம்.

**கல்வெட்டுக்கள் மூலம் நடனத்தின் தொன்மை**

அடுத்து வரலாற்று கால கட்டங்களிலே கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்களை ஆதாரமாக நடனத்தினை நோக்குவோமாயின் தமிழகத்தில் கி.மு 3ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியினைச் சார்ந்த பிராமி வரிவடித்தில் எழுதப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. 1962ம் ஆண்டு அரிசலூர் என்னும் இடத்தில் கலாநிதி ரி. என். ராமச்சந்திரன் கண்டு பிடித்துள்ள கல்வெட்டுத் தமிழ் சாஸ்திரிய நடன வரலாற்றில் முக்கியமானது இதில் பரத நாட்டிய செய்முறை சொற்கட்டுக்கள் கண்டசாபு தாளத்தில் அமைந்துள்ள அதாவது

| | |
|---|---|
| க த தி த தி | த தை த தை த |
| தி த த தி | து து து து து |
| த கி தா | தை தி தை தா |
| த த தி த தை | தித திதை த |

என்பது அக் கல்வெட்டில் உள்ள செய்முறை சொற்கட்டாகும். இதில் "த" என்னும் சொற்கட்டு தற்காலத்தில் பரத நாட்டியத்தில் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டு நடன மரபின் தொன்மைக்கும், தொடர்ச்சிக்கும் மிக முக்கியமான ஒரு சான்றாகும்.

**சிற்ப ஓவியங்களில் நடனம்**

சிற்ப ஓவியங்களில் நடனக்கலை வரலாற்றின் ஒரு சான்றாக விளங்குகின்றன. சிற்ப ஓவியங்களில் செதுக்கப்பட்ட தீட்டப்பட்ட காட்சிகள் நடனத்தின் வடிவங்களாகும். நடனக் கலையின் கதைகளைச் சித்தரிப்பனவாகவும் அமைந்துள்ளன. இதனால் நடனக் கலையில் வரலாற்றிலே நடன சிற்ப ஓவியங்கள் செல்வாக்குப் பெறுகின்றன. தமிழகத்தில் பாறை, குகை, ஆலயங்கள் போன்றவற்றில் ஓவியங்கள், சிற்பங்கள், மிகுதியாகக் காணப்பட்டன. ஓவியங்களில் கீழ் வாலை, வேட்டைக்காரன் மலை, சித்தன்ன வாசல், வெள்ளெருக்கம்பாளையம் முதலியன கூடதலாக உள்ளன. கி.மு 8000ம் ஆண்டுகளிற்கு முற்பட்ட புராதன மத்திய இந்தியாவிலுள்ள பிம்பெட்கா குகை ஓவியங்கள் சிம்லா குன்றிலுள்ள ஓவியங்கள் என்பவற்றில் நடனக் காட்சிகள் காணப்படுகின்றன.

கி.மு 2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 2ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் வட இந்திய சிற்பங்களிலே காஞ்சி, பார்கூத், உதயகிரி, ஒரிசா முதலிய இடங்களிலுள்ள நடன சிற்பங்கள் குறிப்பிடற்பாலன காஞ்சி, பார்கூத் சிற்பங்களிலே கணவனை, மனைவி நடனம் மூலம் மகிழ்வித்தல், வாத்திய இசைக்கேற்பத் தேவ கன்னியரும் கணிகையரும் ஆடல் புரிதல், நாகராஜனும் நாக கன்னியரும் ஆடல் திருமகள் ஆடல் முதலியன குறிப்பிடற்பாலான மேலும் குப்தர் காலத்தில் தோற்றம் பெற்றதாகக் கருதப்படும் சிற்ப ஓவியங்களிலும் சிற்பங்களிலும் நடனக் காட்சிகள் உள்ளன. அமராவதி சிற்பத்திலே நடனத்தின் கரணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. வட மதுரையில் கற்பலகையிலும் ஒரிசாவிலுள்ள ரணிகும்பா குகையிலும் அக்கால நடன அரங்க அமைப்பு சித்தரிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய வரலாற்றுக் காலங்களிலே கற்களால் கோயில் அமைக்கப்பட்ட காலம் பல்லவர் காலம் ஆகும். இக்காலத்திலே கட்டடங்கள் கட்டப்பட்டன. இதனால் சிற்ப, ஓவியங்களும் சிறப்புற்று வளர்ந்தன. மகேந்திரவர்மன் இராஜசிம்மன் போன்ற பல்லவ மன்னர்கள் கலையிலே அதிக பிரியம் உடையவர்கள் என்பது இவர்கள் கட்டுவித்த கோயில்களில் இருந்து அறிய முடிகின்றது. மாமல்லபுர சிற்பங்களிலே சிவன் தண்டு முனிவருக்கு நாட்டியம் கற்பிப்பதைக் காட்டும் சிற்பமும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. சித்தன்ன வாசல்

ஓவியங்களிலுமுள்ள இரு நடன ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. ஆலயங்களின் தூண்கள் விமானம் சுவர்கள் போன்றவற்றில் நடன சிற்ப ஓவியங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வைகுந்த பெருமாள் ஆலயத்தில் ஆண், பெண் சேர்ந்து நடனமாடும் சிற்பங்கள் 108 கரணங்கள் சிலவற்றின் சிற்பங்களும் நன்கு தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன. இக்காலத்திலே தான் மிக நேர்த்தியான கலையழகு வாய்ந்த நடராஜர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. காஞ்சி கைலாச நாதர் ஆலயத்திலும் பல வகையான நடன சிற்பங்கள் காணப்படுகின்றன.

கலைகளையும் சமயத்தையும் வேறுபிரித்துப் பார்க்க் முடியாத அளவிற்கு இவை ஒன்றாகவே வளர்ந்தன. இவற்றைத் தெளிவாக சோழர் காலத்தில் நாம் காணலாம். மிகப் பிரமாண்டமான ஆலயங்கள், மண்டபங்கள், கோபுரங்கள் என்பன அமைக்கப்பட்டு இவற்றினை அழகுபடுத்த சிற்ப ஓவியங்களும் அமைக்கப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் திருவரங்கம் போன்ற ஆலயங்களிலே நடனக் கலையுடன் சம்பந்தப்பட்ட சிற்ப ஓவியங்களைச் சிறப்பாகக் காணலாம். ரவிகுல மாணிக்க ஈஸ்வரர் கோவிலிலே இராஜராஜனின் மகள் குந்தவையின் நடனத் தோற்றம் சிறப்பம்சமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தஞ்சை பெருவுடையாரில் 105 கரணங்களில் 81 கரணங்கள் நேர்த்தியான முறையில் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூற்றாண்டு வரையும் பல நடனக் கதைகள், கரணங்கள், முத்திரைகள் என்பன சிற்ப ஓவியங்களில் சிறப்பாக விளங்குகின்றன. கோயில்கள் கல்யாண மண்டபங்கள் மேடை அமைப்புகள் தேர்கள் போன்றவற்றில் சிற்ப ஓவியங்களை மிகுதியாகக் காணலாம். இவற்றிலே நடராசர் வடிவங்களை கதைகளை நடன முத்திரைகள் தற்கால சிவன் ஆலயங்களில் 108 கரணங்கள் ஓவியங்களாக வரைவது குறிப்பிடத்தக்கது.

நாயக்க மன்னர் காலத்தில் நீண்ட மண்டபங்கள் இருந்தன என "பயஸ்" என்ற ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக நடனக்கலை வரலாற்றுக் கால கட்டத்தில் சிற்ப ஓவியக் கலைகளின் செல்வாக்கும் சிறப்பாகக் காணப்பட்டன எனலாம்.

**"வாழ்க பரதக்கலை**

**வளர்க கலைப் பாரம்பரியம்"**

**செல்வி. ந.யசோதா**

**நடனத்துறை மாணவி**

**1ம் வருடம்.**

# 22 சுருதி பற்றிய விபரம்
# லட்ஜ - பஞ்சம, ஸட்ஜ - மத்திம முறையினால் உண்டாகும் சுருதிகளின் விபரம்

**22 சுருதி பற்றிய விபரம்:**

நமது இசைக்குத் தாயாகக் கருதப்படுவது சுருதியாகும். எனவே இதனை "சுருதி - மாதா, லயம் - பிதா" என்று சிறப்பித்துக் கூறுகின்றோம். பண்பட்ட காதுகளினால் நாதத்தின் வேறுபாட்டை அறியக் கூடிய நுட்பமான ஒலியைச் "சுருதி" என்று கூறுகின்றோம். எனவே இத்தகைய இனிமையான நாதத்தின் நுண்ணிய பகுதியே சுருதியாகும். நம்முடைய கர்நாடக இசையில் நுட்பமான சுருதியாகிய நிர்ணயிக்கப்பட்ட சுருதியே மிகவும் சிறப்புடையதாகும்.

நமது இசையில் $\frac{1}{4}, \frac{1}{2}, \frac{3}{4}, \frac{1}{8}, \frac{1}{12}$ எனப் பல வகையாகச் சுருதிகளைக் கணக்கிடுகின்றனர். இவ்வாறான சுருதியிலிருந்து தான் ஸ்வரங்களும், ஸ்வரங்களின் சேர்க்கையில் இராகமும் கிடைக்கின்றன. ஆகையினால் இராகம் பொலிவு பெற சுருதியை நன்கு பயிற்சி செய்தல் வேண்டும். ஒவ்வொரு ஸ்வரமும் அதற்கேற்ற ஒலி நிலையில் ஒலிப்பதற்கு நன்கு பயிற்சி செய்தல் அவசியமாகும். நம் முன்னோர்கள் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இடைவெளி, அளவு, துடிப்பு, எண் ஆகியவைகளை ஓரளவிற்கு நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவுகளைச் சரியான முறையில் பாடுவதற்குக் கேள்வி ஞானம் மிகமிக அவசியமாகும்.

உதாரணமாக:

1. சங்கராபரணத்தின் ஜன்னியமான பேசடை இராகத்தின் மத்திமத்தைக் கூறலாம்.
2. மாயாமாளவகௌளையின் ஜன்னியமான சாவேரி இராகத்தின் தைவதத்தைக் கூறலாம்.
3. மாயாமாளவகௌளையின் கௌளை இராகத்தின் ரிஷபத்தைக் கூறலாம்.

இவ்வாறு ஒரே இராகத்தில் தோன்றிய ஸ்வரஸ்தானங்கள் இராகத்திற்குத் தக்கவாறு சுருதி நிலையில் மாறுபாடு அடைந்து இராகத்தின் சொரூபத்தைக் கொடுக்கின்றது. ஆகவே அந்த இராகங்களை நாம் பாடும்போது இராக உணர்வுடன் பாடுதல் அவசியம். இவ்வாறான சுருதி அளவுகளை பல வல்லுனர்கள் பலவிதமாகக் கூறியுள்ளனர்.

உதாரணமாக:

நாரதரின் சங்கீத மகரந்தம், பரதரின் நாட்டிய சாஸ்திரம், சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரம், பாவட்பட்டருடைய அனுப சங்கீத விலாசா

போன்ற நூல்களில் 22 சுருதிகள் என்பதைப் பலவிதமாக கணக்கிட்டுள்ளனர். இவற்றில் குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கு 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த சாரங்கதேவரின் 22 சுருதி அளவுகளே தற்போதைய இசைக்குப் பொருத்தம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தான் 72 மேளகர்த்தா இராகங்களின் அமைப்பும் அமைக்கப்பட்டுள்ளது. 7 ஸ்வரங்களில் ஸ - வும், ப - வும் நிலையான ஸ்வரங்கள் எனவே அவைகளிற்கு சுருதி இடைவெளிகள் கிடையாது. மீதமுள்ள ரி, க, ம, த, நி என்ற ஐந்து ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் முறையே நான்கு வித சுருதி இடைவெளிகளைக் கொண்டிருக்கிறது.

7 ஸ்வரங்கள் 12 ஸ்வரஸ்தானங்களாக விரிவடைவதைப் போலவே ஒவ்வொரு ஸ்வரஸ்தானமும் இரண்டிரண்டு சுருதிகள் வீதம் 22 நுண்ணிய ஸ்வரங்களாக விரிவடைகின்றன. இந்த நுண்ணிய சுருதிகளை பண்டைய தமிழிசையில் "அலகுகள்" என்றழைத்தனர்.

| **7 ஸ்வரங்கள்** | **12 ஸ்வரஸ்தானங்கள்** | **22 சுருதிகள்** |
|---|---|---|
| 1. ஸட்ஜம் | ஸட்ஜம் | ஸட்ஜம் |
| 2. ரிஷபம் | சுத்தரிஷபம் | ஏக சுருதிரிஷபம் |
| | | துவி சுருதிரிஷபம் |
| | சதுஸ்ருதிரிஷபம் | திரி சுருதி ரிஷபம் |
| | | சதுஸ்ருதி ரிஷபம் |
| 3. காந்தாரம் | சாதாரண காந்தாரம் | கோமள சாதாரண காந்தாரம் |
| | | சாதாரண காந்தாரம் |
| | சுந்தர காந்தாரம் | சுந்தர காந்தாரம் |
| | | தீவிர சுந்தர காந்தாரம் |
| 4. மத்திமம் | சுத்த மத்திமம் | சுத்த மத்திமம் |
| | | தீவிர சுத்த மத்திமம் |
| | பிரதி மத்திமம் | பிரதி மத்திமம் |
| | | தீவிர பிரதி மத்திமம் |
| 5. பஞ்சமம் | பஞ்சமம் | பஞ்சமம் |
| 6. தைவதம் | சுத்த தைவதம் | ஏக ஸ்ருதி தைவதம் |
| | | துவி ஸ்ருதி தைவதம் |
| | சதுஸ்ருதி தைவதம் | திரி ஸ்ருதி தைவதம் |
| | | சதுஸ்ருதி தைவதம் |
| 7. நிஷாதம் | கைசிகி நிஷாதம் | கோமள கைசிகி நிஷாதம் |
| | | கைகிசி நிஷாதம் |
| | காகலி நிஷாதம் | காகலி நிஷாதம் |
| | | தீவிர காகலி நிஷாதம் |


இந்த முறையில் ஒவ்வொரு ஸ்வரமும் நான்கு சுருதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 22 சுருதி அமைப்பில் ஒரு சுருதிக்கும் அதை அடுத்துவரும் சுருதிக்குமுள்ள இடைவெளியை "ஏகசுருதி" என்றழைக்கின்றனர். இந்த ஏக சுருதியானது மூன்று வகையான அளவுகளைப் பெற்றுள்ளது அவை,

1. பூர்ண ஏக சுருதி = $\frac{256}{243}$ = 90 சதங்கள்

2. நியூன ஏக சுருதி = $\frac{25}{24}$ = 70 சதங்கள்

3. பிரமாண ஏக சுருதி = $\frac{81}{80}$ = 22 சதங்கள்

**திருமதி. சிவசக்தி சிவகுமார்.**
**சங்கீதப் பிரிவு மாணவி,**
**1ஆம் வருடம்.**



# முக்கலையை வாழ்த்துகின்றேன்

முத்தமிழ் என்னும் முத்தான பெயர் கொண்டு
முடியுடை மன்னர் மூவேந்தர் நிலமேறி
மூவுலகமும் முழுமை என்றால் – உனக்கு
நிகரென வேறென்ன சொல்வேன்
கவி வடிவில் உனக்கென்று வர்ணனை சொல்ல
எனக்கேது தாய் மொழியில் சொல்லிங்கு – ஆனாலும்
வர்ணிக்கவில்லை என்றால் சங்கத் தமிழ் – என்
கடதாசியிலே பொய்யாகிவிடும் – ஆதலால்
உனக்கே முதலில் தலை வணங்கி எழுதுகின்றறேன்
என் இனிய தங்கத் தமிழால்

கம்பனென்ன கயவியாழம் கவியரசாலே
சிறைப்பிடிக்க முடியவில்லை
எனத் தெரியுமா? உன் மூவடிகை – அந்த
எழில் அதிசயங்களாலே அகிலத்தையே
ஆளுகின்றாய் ஏன் அரவணைக்கின்றாய்
ஆடியென்ன அடிமை யென்ன
இனமென்ன மதமென்ன பார்ப்பதில்லை – நீ
மானிடத்தில் வேறுபாடு அதனால் தான்
தொலைந்திடாது எம் நினைவுகளில்
முக்காலமும் தவழ்ந்து வருகின்றாய்

கானக் கருங்குயிலில் கூட
கனிமொழி சொல்லுமுன் தன் காதுகளில்
கர்நாடகத்தை வாங்கிக் கொண்ட பின்பு தான்
கானம் இசைக்க நினைக்கின்றது
வார்த்தைக்கு இசை மீட்டி செவிகளுக்கு
இன்பம் தந்து இனியவளென்னை
இளமையாக வருடிவரும் – என்
இசைத் தென்றலே உன்னை
செந்தமிழ் கொண்டு செழுமையுடன்
வாழ்த்துகின்றேன் சங்கீதமாக.

வண்ண மயில் கூட தன்னழகிய
வர்ணத் தோகை விரிக்கும் முன் – அந்த
பாரத மண்ணை விரிக்கும் முன் – அந்த
பரதமாடத் தொடங்குகின்றது
நாவேழு முத்திரைகளிலும் நடராஜனின்
ஈரைந்து விரல்களிலே பாவம் செய்ய
பார்பப்பவரின் உணர்வுகளைத் தூண்டிவிடும்
பரதக் கலையே உன்னை நான்
பண் தமிழ் கொண்டு பசுமையுடன்
வாழ்த்துகின்றேன் நடனமாதுவாக.

இறைவனின் இயற்கைகள் கூட
பிக்காசோவின் ஆற்றலைக் கண்டு தான்
தன்னழகை மெருகூட்டுகின்றன.
அஜந்தாவின் அற்புதமும் ஈசுறு முனியின்
காதலின் சிறப்பும் சந்திரனை விஞ்சும்
வட்டக் கல்லும் கண்கொள்ளாக் காட்சியாக
என் கனவிலும் கலக்குகின்றன.
கற்பனைக்கு எட்டாத ஓவியத்தின்
எழிலழகை ஓரிரு வரிகளில் நான்
வாழ்த்துகின்றேன் மோனாலிஸாவாக.

காலத்தால் அழியாத கலையே – உன்னை
விரும்பாத கலைஞர்கள் வையகத்தில் உண்டோ?
கவியால் உன்னைப் புகழாத கவிஞர்கள்
காவியத்திலே உண்டோ?
காற்றிலே தவழ்ந்து வரும் கலையே உன்னை
காதல் செய்யாதவர்கள் காண்டத்தில் உண்டோ?
காலத்துள் அசைந்தாடும் கலையே
உன்னை என் வெள்ளைக் காகிதத்தில்
கவியாலே வாழ்த்துகின்றேன் – என்
கருமை நிற எழுது கோலால் வாழ்க முக்கலையே.

**செல்வி கு.சுஜீதா**
**இசைத்துறை மாணவி**
**1ம் வருடம்.**



கௌத்துவ நடனம்




தேசிய இளைஞர் தின விழாவில் இசைத்துறை மாணவிகள்

# எமது மனம் நிறைந்த நன்றிகள்

- எமது இதழுக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய சான்றோர்கள்,
- என்றும் எம் வழிகாட்டிகளாக விளங்கும் எமது விரிவுரையாளர்கள்,
- விளம்பர அனுசரனை வழங்கி உதவிய வர்த்தக நிறுவனத்தினர்,
- புகைப்படங்களை எடுத்துதவிய புகைப்படக் கலைஞர் திரு.சிவம்,
- எமது கற்பனைக்கு வடிவம் தந்து எமது நூலினை நேர்த்தியாக வடிவமைத்துத் தந்த "சுடர்நிலவு கிரபிக்ஸ்" நிறுவனத்தினர்,
- எம்முடன் இணைந்து உதவு புரிந்த எமது கல்லூரி சகோதர சகோதரிகள்,
- மேலும் "பரதகீதாஞ்சலி" வெளிவருவதற்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்பு உள்ளங்கள் அனைவரிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாணவர் சமூகம்,**
**தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இசை நடனக் கல்லூரி,**
**மருதனார்மடம்.**

# Best Wishes For You

With Best Compliments From :-

1. Vali. Southwest Divisional Federation of Youth Clubs.
2. Vali. South Divisional Federation of Youth Clubs.
3. Vali. North Divisional Federation of Youth Clubs.
4. Vali. East Divisional Federation of Youth Clubs.
5. Karaveddy Divisional Federation of Youth Clubs.
6. Nallur Divisional Federation of Youth Clubs.
7. District Divisional Federation of Youth Clubs, Jaffna.
8. Chavakachcheri Divisional Federation of Youth Clubs.



# Lovers Corner





கொரியா, பாங்கொங் நாடுகளில் இருந்து நேரடியாக (import item)
இறக்குமதி செய்யப்பட்ட (F) பான்சி பொருள்கள் (Fancy Items)
Slippers (காலணிகள்), காப்புகள் (Bangles), தோடுகள்
(Earrings), முக ஒப்பனைப் பொருள்கள் (Make up Item)
மற்றும் மங்கையர் மனம் கவர் பல பொருள்களுடன்
புதுப்பொலிவுடன் உதயம்



## Lovers Corner

The Latest fancy Collection
for Youth We have for You

164, Ramanathan Road, Jaffan
50, Point Pedro Road, Nallur, Jaffna


வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
நவீன முறையிலான பேஷியல் வகைகள்
முகப்பரு, பொடுகு, கண் கருவளையம், தலைமுடி உதிர்தல் போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.
திரெட்டினிங், வக்ஸிங், ஹியாகட்ஸ், Body பொலிஷிங், பெடிக்கியூர், மெனிக்கியூர்
கரும்புள்ளிகள், காய்கள் அகற்றுதல்
சர்வதேச தரத்திலான மேக்கப் முறைகளுக்கான பயிற்சி மற்றும் பாடத்திட்டங்கள்
T.P : 0770540935, 0754099871
அனைத்து விதமான மணப்பெண் அலங்காரம் எமது சிறப்பம்சம் ஆகும்
மஞ்சவனப்பதி முருகன் கோவில் வாசல், கொக்குவில் கிழக்கு. (OPP. BOC)


கலையின்பமே நிலையின்பம்

# யாழ் நகரில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

**மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்**

# கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக
சாரதிப் பயிற்சிப் பாடசாலை





வான், முச்சக்கரவண்டி,
உழவு இயந்திரம் (டக்டர்) அனுமதிப்பத்திரம்
உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால்
கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்
பத்திரம் பெற முடியும்.



பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்

(AD) சாரதி அனுமதிப்பத்திரம்
பெற அசோக் லேடன் பஸ் மூலம்
இலகுவான பயிற்சி பெறலாம்.

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விடேச வீடியோ வகுப்பு நடைமுறை.
- மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரயலில் சித்தியடையத் தவறின் தொடர் பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.

# KIRUBA LEARNERS

**(Govt. Approved Driving Training School)**

தலைமைக்காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200
071 454 6952

**எமது கிளைகள்**

சாவகச்சேரி
021 492 3202
021 227 0700


நெல்லியடி
021 300 6550
071 454 6957

சுன்னாகம்
021 224 2022
071 454 6956

பருத்தித்துறை
021 492 3201
071 454 6958
077 722 5292

கிளிநொச்சி
021 228 5505
071 454 6955

விசுவமடு
021 320 1515
071 454 6955









சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில்.